உ
சிவமயம்

# சைவநீதி
SAIVANEETHI

மலர் 21 | ஏவிளம்பி தை - பங்குனி | 2018 Jan. - Mar. | இதழ் 10,11,12





ரூபா.50/-

லிங்கோற்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் வெளிவர அனுசரணை
கொழும்பு
திரு. கருணானந்தன்

## திருவாசகப் பெருவிழா 2017.12.17
## ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக் கல்லூரி, முன்னேச்சரம்.





## சைவநீதி முத்திங்கள் இதழ் பெறுமதி விபரம்

தனிப்பிரதி ரூபா 50.00. ஆண்டொன்றுக்கு ரூபா. 300.00
ஏனைய நாடுகளில் ஆண்டொன்றுக்கு
ஸ்ரேலிங் பவுண் £10 அல்லது அமெரிக்க டொலர் US $ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
C. Navaneethakumar
No: 1/2, 'B' Block, Govt. Flats,
Hospital Road, Dehiwela.
Tel : 077 900 8286

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி



மலர் ௨ ஏவிளம்பி தை - பங்குனி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் 10, 11, 12

**தொடக்குனர்:**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்,
சித்தாந்தச்செம்மணி.
**திரு. செ. நவநீதகுமார்** M.A.

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
கொழும்பு.

No. 1/2, 'B' Block,
Govt. Flats,
Hospital Road,
Dehiwela.
Tel: 0779 008 286

## இதழின் உள்ளே

01. சைவசித்தாந்த நோக்கில் சைவசமய தத்துவார்த்தம் - 2

02. வீட்டுநெறிச் சிவநூல் - 6

03. திருமுறை எனும் தமிழ் மறை - 8

04. பைரவர் வழிபாடு - 13

05. கடவுளைக் காணமுன் உன்னைக்காண் - 14

06. சைவசமயம் மாணவர் அறிவுப் பெட்டகம் - 16

07. சைவசித்தாந்த எளிமைப்படுத்தலில் நாவலர் பெருமானின் பங்கு - 19

08. மெய்ப்பொருள் நாயனார் - 23

09. நல்லவர் பகையும் நலம் புரியும் - 25

10. திருவாசகத்துக்கு உரைசொன்னவர்கள் - 28

11. யாப்பிலக்கணம் (வினாவும் விடையும்) - 31

12. அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம் - 33

13. திருவருட்பயன் பதிமுது நிலை - 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவசித்தாந்த நோக்கில் சைவசமய தத்துவார்த்தம்

- சைவசித்தாந்தரத்தினம் சிவஸ்ரீ சி.குமாரராஜக் குருக்கள்

சிவத்தினோடு சம்பந்தம் உடையது சைவம். செய்யப்பட்ட நெறி சமயம். ஆகவே சைவசமயம் என்பது சிவத்தினோடு உயிர்களை தொடர்பு படுத்தும் மார்க்கமாகும். அதாவது மக்கள் உயிர்கள் சிவத்தை அடைதற்குச் செல்லும் மார்க்கம் சைவசமயமாகும். ஒரு குறிக்கோளை அடைவதற்கு செல்லும் மார்க்கம் சைவ சமயமாகும். சிவம் என்ற சொல் மங்கலம் அல்லது நன்மை என்று பொருள்படும். மனம், நா, மெய் முதலியவைகளால் உயிர்கள் இன்பம் அடையும் வண்ணம் செய்யப்படுகின்ற காரியங்கள் அனைத்தும் நன்மையாகும். உலக வாழ்க்கையில் உயிர்கள் எல்லாம் இன்பத்தையே நாடவும், தேடவும், கூடவும் செய்யப்படுகின்றன. இங்ஙனம் உயிர்கள் அனைத்தும் இன்பத்தை விருப்பத்தால் நாடி அறிவால் தேடிச் செயலால் கூடுகின்ற தன்மையானது இன்பப் பொருளாகிய சிவத்தை அடையச் செய்கின்ற இயல்பே அல்லாமல் வேறு அன்று. இங்ஙனம் உயிர்கள் எல்லாம் இன்பத்தை அடைவதற்கு உதவும் பொருளாக உண்மையாக உள்ளது சிவமேயாகும். சிவசம்பந்தம் இல்லாமல் எந்த உயிரும் எவ்வகையான இன்பத்தையும் அடைவது என்பது முடியாது. மக்கள் உயிர்கள் இத்தகைய சிவப் பரம் பொருளை அடையச் செய்யும் நெறியே சைவசமயமாகும்.

மற்றைய சமயங்களில் கூறப்படாததாய் சைவசமயம் ஒன்றினுக்கே சிறப்பாக உள்ள இலக்கணங்கள் பல உள்ளன. அந்தச் சிறப்பு இலக்கணங்கள் சைவசமயத்துக்கு மற்றைய சமயங்களின் தலைமைப் பதவியைக் கொடுத்து ஏனைய சமயங்களை எல்லாம் சைவசமய நிலையை எய்துதற்கு ஏறிவரும் படிகளாக அமையும்படி செய்கின்றன. உலகில் உள்ள மற்றச் சமயங்களுக்குச் சைவசமயம் தலைச்சமயம் என்பதனால் சைவசமயக்கடவுள் ஏனைய சமயங்களைப் பின்பற்றி ஒழுகும் மக்கள் இடத்தில் பேரன்பும் பேரறிவும் போற்றலும் உடைய முழுமுதற் கடவுளாக அந்தச் சமய கடவுளரை அனுட்டித்து நின்று அவரவர் செய்யும் வினைக்குத் தகுந்தபடி நல்வினை தீவினை இரண்டையும் விளைவிக்கின்றான் என்பது தெரியவரும்.

சைவசமயமானது தனது சிறப்பு இலக்கணங்களில் ஒன்றாக கடவுளுக்கு பொது இயல்பு, சிறப்பு இயல்பு என இரண்டு இலக்கணங்கள் கூறுகின்றது. பொது இயல்பானது தடத்த இலக்கணம் என்றும் சிறப்பு இயல்பானது உண்மை இயல்பு (சொரூப இலக்கணம்) என்றும் கூறப்படும். சுருக்கமாக கூறின் உயிர்கள் மேல் வைத்த பெரும் இரக்கத்தாலும் பெரும் கருணையாலும் அந்த உயிர்களுக்கு படைப்பு முதலாகிய ஐந்து தொழில்களை இயற்றி அருள் செய்யும் பொருட்டு இறைவன் உயிர்களோடும் உலகத்தோடும் சேர்ந்து அல்லது கலந்து நிற்கும் நிலை அவனுடைய பொது இயல்பாகும்.

பஞ்சகிருத்தியம் செய்பவர் சிவபிரான் என்பதனைச் சுவேதாஸ்வரத உபநிடதமும் தைத்திரிய உபநிடதமும் பின்வருமாறு குறிப்பிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுவேதாஸ்வரத உபநிடதம்**

பரம்பொருளை அறிந்தவர்களே உலகத்துக்குக் காரணம். பிரமம் யாது? எங்கு இருந்து பிறந்தோம்? (இதனால் தோற்றம் குறிக்கப்பட்டது) எவரால் நிலையுறுகின்றோம்? (நிலை குறிக்கப்பட்டது) எவரிலே இலயமுறுகின்றோம்? (ஒடுக்கம் குறிக்கப்பட்டது) எவரால் இன்பத்திலும் துன்பத்திலும் அனுட்டிக்கப்பட்டோம்? (திரோபவம் மறைப்பு குறிக்கப்பட்டது) எவரால் பந்தம் நீங்கிய அனுக்கிரகநிலை எய்துகின்றது? (அனுக்கிரகம் குறிப்பப்பட்டது)

**தைத்திரிய உபநிடதம்**

எதில் இருந்து இந்த ஜீவன்கள் எல்லாம் தோன்றுகின்றனவோ, தோன்றியவை எதனால் நிலையுறுகின்றனவோ, ஒடுங்கும் காலத்தில் அவை எதனுள் பிரவேசிக்கின்றனவோ அதனை அறிவாயாக. அதுதான் பரம்பொருள் என்பது தெளிவு.

இதனால் படைத்து, காத்து, அழிப்பது பரம்பொருளே எனப் பெறப்படுகின்றது. இந்நிலையில் திரோதானம் (மறைப்பு) ஒடுக்கத்தில் அனுக்கிரகமும் அடங்கும். இக் கருத்தை திருஞானசம்பந்தப் பெருமான்

**"படைப்புந்நிலை யிறுதிப்பயன் பருமையொடு நேர்மை**
**கிடைப்பல்கண முடையான்கிறி பூதப்படை யானூர்**
**புடைப்பாளையின் கமுகின்னொடு புன்னைமலர் நாற்றம்**
**விடைத்தேவரு தென்றன்மிகு வேணுபுர மதுவே."** (1.9.2)

எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

உயிர்கள் உலகம் என்கின்ற ஒன்றினையும் சாராது முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து இறைவன் தனித்து நிற்கும் நிலை அவனுடைய சிறப்பு இயல்பாகும். இறைவன் சிறப்பு இயல்பு நிலையில் சிவன் என்றும், பொது இயல்பு நிலையில் சக்தி என்றும் கூறப்படுவான். சிவனும் சக்தியும் பிரிக்க முடியாத தாதான்மியப் பொருள்கள். சிவன் இல்லாமல் சக்தியில்லை. சக்தி இல்லாமல் சிவன் இல்லை. சிவன் ஒருவனே உலகிற்கு முழுமுதற் கடவுள். மால், அயன், உருத்திரன் முதலிய மூர்த்திகள் எல்லாம் சக்தியின் தொழில் வேறுபாட்டினால் சொல்லப்படும் மூர்த்திகள்.

சைவசமயமாவது பிருதிவி முதல் நாதம் ஈறாக முப்பத்தாறு தத்துவங்களைக் கூறினாலும் சைவசமயம் கூறுகிற முத்திநிலை அந்த தத்துவங்களை எல்லாம் கடந்த நிலை ஆதலாலும் சைவசமயக் கடவுள் ஆகிய சிவன் தத்துவங்கள் எல்லாவற்றையும் கடந்த அதீத நிலையில் உள்ளவன். ஆதலினால் சைவசமயத்தில் சிறப்பு இயல்பு, பொது இயல்பு என்னும் பாகுபாடு கூறப்படுகிறது.

மற்றச் சமயங்களில் இருபத்துநான்கு தத்துவங்களுக்கு மேல் எந்த சமயமும் கூறுதல் இல்லை. ஆதலாலும் அந்தச் சமயக் கடவுள் உடைய நிலையும் சைவசமயத்தின் முப்பத்தாறு தத்துவங்களுக்குக் கீழ்ப்பட்ட நிலையில் இருப்பதாலும் அந்த சமயங்களில் கடவுளுக்கு சிறப்பு இயல், பொது இயல் என்ற பாகுபாடு கூறப்படவில்லை. மேலும் மற்றைய சமயங்கள் மாய தத்துவங்களின் அமைப்புக்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் இயக்கத்தையும் அறியாமையாலும் அவற்றில் ஒவ்வொன்றும் தன் சமயமே பெரிது என்றும் மற்றய சமயத்தில் உள்ளவர் கடவுளுடைய அருளுக்கு ஆளாகாமல் நரகத்துக்குப் போவர் என்றும் கூறி தடுமாறுகிறார்கள். மாயாதத்துவங்களின் இயற்கை அமைப்புக்கள் இருக்கின்றன. இவையின் வகையை நன்கு அறிந்த சைவசமயம், உலகில் உள்ள பல்வேறு அறியு நிலையில் உள்ள மாந்தர்க்கு அவரவர் அறிவு நிலைக்கு ஏற்ற தத்துவங்களில் வைத்து அமைக்கப்பட்டு இருக்கிற பல்வேறு சமயங்களும் கூறுகிற கடவுள் இடத்தும், வியாபகமாய் இருக்கிற சிவன் அனுட்டித்துநின்று, அவைகளை பின்பற்றி உண்மையில் ஒழுகும் பல்வேறு மாந்தர்க்கும் அருள் செய்கிறான் என்று கூறுகின்றது. ஆதலினால் சைவசமயமானது ஏனைய சமயங்கள் எல்லாம் தன்னின் பின்தோன்றல் ஆகிய இளைய சகோதர சமயங்களாகக் கொள்ளுதலே அன்றி அவைகளுடன் சிறிதும் வேற்றுமைப் படுவது இல்லை. உலகில் பல சமயங்களைப் பின்பற்றி ஒழுகும் மாந்தர்க்கு ஏற்றவாறு ஒழுகுதலுக்கு வேண்டப்படுகின்ற சமயம் சைவசமயம். சைவசமயம் எப்போதுமே பொதுவுடைமையாகும்.

உலகிலே பல சமயங்கள் இருக்கின்றன. அவைகளுள் பெரும்பாலானவை காலதத்துவத்துக்குள் அடங்கி இருக்கின்றன. பௌத்தம், கிறீஸ்தவம் முதலான சமயங்களின் தோற்றக் காலங்களை சரித்திரங்கள் விளக்கிக் கூறுகின்றன. ஆனால் எமது சைவசமயமோ காலம் கடந்து நிற்கிறது. இன்ன காலத்தில் இன்னாரால் சைவசமயம் உண்டாக்கப்பட்டது என்று எவராலும் அளவிட்டுக் கூறமுடியாது. மிக பழைமையிற் சிறந்து விளங்கும் இருக்கு வேதத்திலும், சங்க நூல்களிலும் சிவம் என்னும் சொல் காணப்படுகிறது. முன்னைப் பழைமைக்குப் பழமையாயும் பின்னைப் புதுமைக்குப் புதுமையாயும் விளங்கும் சிவம் என்கிற செம்பொருளின் தொடர்புடைய சைவசமயத்தின் காலம் அளவிட முடியாதகாரியம்.

பழைமை ஒன்றையே கருதி சைவசமயத்தைப் போற்றுவோர் போற்றுக. பழைமையோடு பொருள் உண்மையும் சமரசமும் ஜீவகாருண்ணியமும் விளங்கும் ஒரு சமயம் நிலவுமேல் அது அறிஞரின் பாற்பட்டதே. எச்சமயம் பிற சமயங்களைப் பொய் என்று வீழ்த்துகின்றதோ அந்தச் சமயம் சிறப்புற்ற சமயம் ஆகாது. உலகத்தில் தோன்றி உள்ள சமயங்கள் அனைத்தும் உண்மைப் பொருளாகிய கடவுள் ஒன்றையே போற்றுகின்றன. ஒரு கடவுளைப் போற்றும் சமயங்களுள் பொய்ச்சமயம், மெய்ச்சமயம் என்ற பிரிவுக்கு இடமில்லை. எல்லாச் சமயமும் ஒரு கடவுளைத் தேடுகிறது. இந்த உண்மையை சிவஞான சித்தியார் (திருவிளங்கம் 414 - 416) அறிவுறுத்துகிறது.

**ஓதுசம யங்கள் பொருளுணரு நூல்கள்**
**ஒன்றோடொன்(று) ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்**
**யாதுசம யம்பொருள் நூல் யாதிங் கென்னில்**
**இதுவாகும் அதுவல்ல(து) எனும்பிணக்க தின்றி**
**நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண**
**நின்றதுயா தொருசமயம் அதுசமயம் பொருள் நூல்**
**ஆதலினால் இவையெல்லாம் அருமறைஆ கமத்தே**
**அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயத்தை அன்புச் சமயம் என்றும் கூறலாம். சிவம் என்பதற்கு அன்பு என்றும் பொருள் உண்டு. ஆகவே சிவ சம்பந்தம் அன்பு சம்பந்தம். அது அன்புச் சமயமாயிற்று. அன்பேசிவம் என்பது திருமூலர் வாக்கு ஆகும்.

## விபூதி

**சத்தியோஜாதம்** :- என்பது நிலத்தைக் குறிக்கும் (பிருதிவி). இதில் இருந்து நிவிர்த்திகலை. இதில் இருந்து கபிலவர்ண பசு. இதின் கோமயத்தால் எடுப்பது **விபூதி** எனப்படும்.

**வாமதேவம்** :- என்பது தண்ணீர் (அப்பு). இதில் இருந்து பிரதிரதிஷ்டாகலை. இதில் இருந்து கறுப்பு நிற பத்திரை என்னும் பசு. இதின் சாணத்தினால் எடுப்பது **பசிதம்** என்னும் விபூதி.

**அகோரம்** :- என்பது நெருப்பு (தேயு). இதில் இருந்து வருவது வித்தியாகலை. இதில் இருந்து சிகப்பு நிற சுரபி என்னும் பசு. இதன் சாணத்தால் எடுப்பது **பஸ்மம்** என்னும் விபூதி.

**தற்புருடம்** :- என்பது காற்று (வாயு). இதில் இருந்து சாந்திகலை. இதிலிருந்து வெண்ணிற மாகிய சுசிலை என்னும் பசு. இதன் சாணத்தால் **க்ஷாரம்** என்னும் விபூதி.

**ஈசானம்** :- என்பது ஆகாயம். இதில் இருந்து சாந்தி அதீதகலை. இதிலிருந்து பலவர்ண பசு என்னும் சுமனை. இதன் கோமயத்தால் எடுப்பது **இரட்ஷை** எனப்படும்.

**விபூதி** :- ஐஸ்வர்யம் கொடுக்கும்.
**பஸ்மம்** :- எல்லாப் பாவங்களையும் போக்கும்.
**பசிதம்** :- பிரகாசத்தைக் கொடுக்கும்.
**க்ஷாரம்** :- ஆபத்தை நீக்கும்.
**இரட்ஷை** :- பைசாசம், பிரமராட்க்ஷஸம், துர்மரணம் இவைகளிலிருந்து காப்பாற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வீட்டுநெறிச் சிவநூல்

சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்,
ந. சிவபாலகணேசன் B.A. (Hons.) M.A.

திருவாசகப் பொருள் சைவமக்களால் அறியப்பட்டு உணரப்பட வேண்டும். உணர்ந்தபின் அதன்படி ஒழுகுதல்தான் சைவ வாழ்வியலாகும். சைவ வாழ்வு நெறியில் செல்லுகின்ற சைவப் பெருமக்கள்தான் இறை நிலை எய்தும் தன்மையைச் சிந்திக்க முடியும். இதனை "ஈட்டிய மெய்த்தவம் உடையோர் இயம்பிய இத்தமிழன்றி வீட்டு நெறிக்கினிச் சிவநூல் வேறுளதோ என்றார்கள்" எனத் திருவடிபெற்றசருக்கத்தில் 22ஆம் பாடல் மூலம் திருவாதவூரடிகள் புராணத்தில் கடவுள்மாமுனிவர் கூறுவது கொண்டு உற்று நோக்குமிடத்து சிவப்பேறு அடைவதற்கு இது சிறந்த வழியாகும் என்பது போதரும். மெய்த்தவம் உடையோர் பாடியதே இத்திருவாசகம். ஆதலால் வீட்டுநெறிக்குரிய நூல் இது என்றாயிற்று. மேலும் "செங்கைமீது பொருத்தமுறும் புத்தகமேதையா என்னப் பொய்மையிலாச் சிவஞானபோதம் என்றார்." "என்றலுமே சிவம் எது? ஞானம் எது? இலங்கியிடும் போதம் எது?" (திருப்பெருந்துறைச் சருக்கம் 35, 36ஆம் பாடல்கள் திருவாதவூரடிகள் புராணத்தில்) என வினாக்களைத் தொடுத்து நல்பொருள் வினவி நிற்பவரது சிந்தை உருகும் வகையில் உவமையில்லாத இறைவன் உரை செய்து விளக்கினார். சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் சிவம், ஞானம், போதம் என்ற விடயங்கள் பற்றிய நேரடி ஞான உபதேசம் பெற்ற ஒருவர் மாணிக்கவாசகராவார். இதனாலேதான் இவர் வீட்டு நெறிக்குரிய நூல்களைச் செய்ய முடிந்தமை என்ற உண்மைக்காரணத்தையும் இங்கு குறிப்பிடுவது தவிர்க்கமுடியாததேயாகும். அத்துடனல்லாது "மெய்த்தவ வாதவூரன் விளம்பிட எழுதும் இந்தப் புத்தகம் மன்றுளாடல் புரிந்தவன் எழுத்தாம் என்று முத்தியை உதவும் கோவை முடிவிடத்து எழுதி பின்னர்ச் சித்திரமலர்க்கையாலே திருந்த மைக்காப்பும் செய்தார் (திருவாதவூரடிகள் புராணம், திருவடிபெற்ற சருக்கம் பாடல் 15.) என்பதிலிருந்து திருவாசகம், திருக்கோவையார் இரண்டையும் மெய்த்தவ வாதவூரன் விளம்பிட சிவபெருமானாகிய அம்பலத்தாடும் ஐயர் செங்கையில் ஏடுவாங்கித் தெளிவுற வரைந்தார். பின்னர் மைக்காப்பு எனப்படும் கையெழுத்துமிட்டார். இந்தச் செய்கையானது மாணிக்கவாசகர் ஆப்தன் என்ற நிலையைச் சிவபெருமானே உறுதிப்படுத்துகிறார் என்ற முடிவுக்கே எம்மை இட்டுச் செல்கின்றது. இதனால் திருவாசகம், திருக்கோவையாரில் கூறப்பட்டவை எல்லாம் எவ்வித ஐயப்பாடுகளுமின்றி ஏற்கப்படவேண்டியனவேயாகும். இவ்வித மெய்ப்பொருள்களின் உண்மைத் தன்மையை எவராலும் ஏற்காதிருக்கமுடியாது. இந்நிலையைத் தில்லைவாழ் அந்தணர்களும் ஏற்றுள்ளமை காணமுடியும். "**புலியூரர் நேயமுடன் புடைசூழச் சென்று**" பொருள் இவர் என்று உரை செய்து, மன்று அதனிற் கடிது ஏகி மறைந்தனர், திருவாதவூரர் அங்கே அவர்கள் எல்லாரும் காணும்படியாக என்ற நிலைப்பாடு மாணிக்கவாசகரை இறைநிலை எய்தச் செய்தமை கொண்டு வீட்டு நெறி கிடைத்தமை அறியக் கிடக்கின்றது. வீட்டுநெறிச் சிவநூல்களுக்கு தில்லையுளார் பொருள்கேட்க பொருளாக கைகாட்டித் தெரிவித்து தமது உருவம் காட்டாமல் மறைந்த மணிவாசகரது நிலை, சைவமக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைநிலை எய்தும் வழியைத் தெட்டத்தெளிவாகக் காட்டி நிற்பது காணலாம். அத்துடன் பாடல்கள் மூலம் கொள்கைவிளக்கமும், பொருள் தெரிவித்ததால் பொருள்விளக்கமும், உருவம் காட்டாது மறைந்ததால் அனுபவ விளக்கமும் பெறக்கூடிய நிலையையே இந்நூல்கள் கொண்டிருப்பதால் இவைகளே சைவவாழ்வு வாழ்வதற்கும் சிவகதி அடைவதற்குமான சிறந்த முறைகள் என்பது பெறக்கூடியதேயாகும்.

சிவஞானபோத விளக்கம் பெற்றவரும், நயன தீட்சை, திருவடி தீட்சை, மானத தீட்சை, சாத்திர தீட்சை பெற்றவரும் பாடிய பாடல்கள் யாவுமே சைவசித்தாந்த பொருள்பொதிந்தவை மட்டுமல்ல, சிவநெறிக்கு வழி வகுப்பனவாகவும் உள்ளன. மேலும் அம்பலத்தாடும் ஐயர் வந்து திருவாசகத்தை தம்கைப்பட எழுதியதும், கோவை பாடச் சொல்லி கோவை பாடுவித்து எழுதியதும் வரலாறு காட்டும் உண்மை. அத்துடன் மைக்காப்புச் செய்ததும், இந்நூல்களிரண்டும் வீட்டு நெறிச் சிவநூல்கள் என்பதை ஆவணச் சான்று பகர்வதாகவும் உள்ளது கண்கூடு. மேலும் "**நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை**" எனக் கூறுவதன்மூலம் இறைவன் தன்னைக் கருவியாகக் கொண்டு பாடுவித்தார் என்பதை அகச்சான்று மூலம் மணிவாசகர் காண்பிக்கிறார். "**நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி**" என்பதும் இன்னொரு அகச்சான்றாகும். குருவாக திருப்பெருந்துறை குருந்தமர நீழலில் வந்து ஈர்த்து எனையாட்கொண்ட எந்தை பெருமானே என ஆட்கொண்ட நிலையை அகச்சான்று காட்டிப் பேசுகின்றார். "**குருந்தின் கீழ் அன்றிருந்த கொள்கையும்**" (கீர்த்தித்திருவகவல் 61ஆம் வரி) என்பதும் குருவாக வந்திருந்தமையையே காட்டும் சான்றாகும். மேலும் திருவண்டப் பகுதியில் 58, 60 - 63ஆம் வரிகள் காட்சியளவை கொண்டும் மணிவாசகர் காட்டும் அகச் சான்றுகளாகும். அவை:

"**கண்ணால் யானும் கண்டேன் காண்க**"
"**கருணையின் பெருமை கண்டேன் காண்க**" 60ஆம் வரி
"**புவனியில் சேவடி தீண்டினன் காண்க**"
"**சிவன் என யானும் தேறினன் காண்க**"
"**அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க**"

போற்றித்திருஅகவலில் 75, 76, 129, 130ஆம் வரிகள் வருமாறு

"**அருபரத் தொருவன் அவனியில் வந்து**
**குருபரனாகி அருளிய பெருமையை**"

இதுவும் குருவாக வந்து அருளிய நிலைக்கான அகச்சான்றாகும்.

"**என்னையும் ஒருவன் ஆக்கி இருங்கழல்**
**சென்னியில் வைத்த சேவக போற்றி**"

இது திருவடி தீட்சை பெற்றதற்கான அகச்சான்றாகும்.

திருச்சதகம் 25, 28ஆம் பாடல்

"**எந்தாய் உன்றன் வண்ணந்தான் அதுகாட்டி, வடிவுகாட்டி, மலர்க்கழல்கள் அவைகாட்டி, வழி அற்றேனைத் திண்ணந்தான் பிறவாமற் காத்து ஆட்கொண்டாய்**" இனிமேல் பிறவியில்லாது காத்தனை என்பது விளக்கும் நிலையிலுள்ளது. அதேபோல

(தொடர்ச்சி 40ஆம் பக்கம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமுறை எனும் தமிழ் மறை

- சைவப்புலவர், திருமுறைநெறிச்செல்வர், சித்தாந்தரத்தினம் வைத்தியகலாநிதி
ஸ்ரீ கார்த்திகைக்குமரன் சரவணமுத்து.

பன்னிருதிருமுறை நூல் பெயர் ஒன்று; ஆக்கியோர் இருபத்துஎழுவர். பன்னிருராசிகள், நட்சத்திரங்கள் இருபத்துஏழு. உலகியலில் ஆட்சிசெய்வது, இருபத்துஎழுவர் ஆக்கிய பன்னிருதிருமுறைகள் ஆன்மிக உலகை அருள் உலகை ஆள்வது.

திருமுறைகள் என்பதற்குப் பல கருத்துக்கள் கூறப்பட்டாலும் திரு-தெய்வத்தன்மை பொருந்திய என்கின்ற அடைமொழியாகி முறை எனப்படும் இறைவனிடம் முறையிடும் தோத்திரங்கள் எனும் பதத்துடன் சேர்ந்து இறைவனிடம் முறையிடும் தெய்வத்தன்மை பொருந்திய தோத்திரம் என சிறப்புக்கருத்தைத் தாங்கியுள்ளது.

**"ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி**
**வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை**
**பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்**
**சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே".** திருமந்திரம் 1067

சரஸ்வதி இறைவனை தோத்திரம் செய்து முறையிடுவதாக அமைந்துள்ளது.

நாயன்மார்கள் ஏன் இத்திருமுறைகளைப் பாடினார்கள் என நோக்குவோம்.

.... **நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பின் மிக்க**
**அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மைச்**
**சொற்றமிழ் பாடுக" என்றார் தூமறை பாடும் வாயார்.**
(தடுத்தாட்கொண்ட புராணம் 1.5.70)

என முக்கண் முதலவன் பணிக்கின்றான். அவன் தூய மறையைப் பாடுகின்றவன் அல்லவா. இதற்கான காரணம் யாதெனில் சிவாலயங்களில் பூசைகளின்போது ஓதப்படும் மந்திரங்கள் சிவாகமங்களில் இருந்து பெறப்படவில்லை. அவையாவும் வடமொழியில் உள்ள வேதங்களில் இருந்து தொகுக்கப்பட்டவை. எனவே சிவாகமத்துக்குட்பட்ட தமிழ்வேதம், மந்திரங்கள் தம் தேவை உணரப்பட்டு கங்கைவார் சடையெம் பெருமானால் நாயன்மார்களுக்கு இடப்பட்ட கட்டளையாகும். இவ் இறை வாக்கைப்பற்றி நாயன்மார்கள் கூற்றைக்காண்போம்.

திருஇலம்பையங்கோட்டூர் பதிகம் திருமுறை 1 - 76 இல் பதிகம் முழுவதும் "**எனதுரை தனதுரையாக**" எனப் பதிவுசெய்கின்றார் ஞானசம்பந்தப்பிள்ளையவர்கள்.

வாகீசப்பெருமகன் தமது திருப்புள்ளிருக்குவேளூர் திருத்தாண்டகம் 3ஆம் பாடலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாட்**
**பாமாலை பாடப் பயில்வித் தானை....."** (6.54.3) என வாக்களிக்கின்றார்.

நம்பிஆரூரர் ஏழாந்திருமுறையில் அமைந்துள்ள தமது திருக்கழுமலப் பதிகத்தின் இரண்டாம் பாடலில்

" ................ **வானவ ரறியா**
**முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்**
**கற்பனை கற்பித்த கடவுளை யடியேன்**
**கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே"** (7.58.2)

எனப் பாடுகின்றார். முக்கண் முதல்வன் சுந்தரர்பெருமானுக்குத் தன்னைப் பாட அடியெடுத்துக் கொடுக்கின்றார். முதலில் அவரை ஆட்கொண்ட ஆண்டவன் தன்னைப்பாடப் பணிக்கின்றார். எப்படிப்பாடுவேன் என வன்தொண்டர் வாக்கு வராது தடுமாற, வானவரும் உணரா ஞானநெறிகளை எல்லாம் காட்டி உணர்த்தி "பித்தா" எனப் பாட அடி எடுத்துக் கொடுத்து சிவஞானத்தைக் கற்பித்துவிடுகின்றார். அதைத்தான் இங்கு குறிப்பிட்டு அக்கடவுளை சிவஞானத்தை எவ்வடிவில் வந்து உணர்த்தி பசு கரணங்களை எல்லாம் பதி கரணங்களாய் மாற்றி வித்தைகள் பல செய்தாரோ அவ்வடிவில் கண்டேன் என்பார்.

மணிவாசகப் பெருமானார் தமது திருக்கோத்தும்பிப் பதிகத்தின் பன்னிரண்டாம் பாடலில் "**நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை....**" எனப் போற்றுகின்றார். திருவாசகத்தின் முதற்பாடலான சிவபுராணம் திருப்பெருந்துறையுறைவானின் திருவடிகளைப் போற்றியே ஆரம்பிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக இறைவனார் தம்மைப் பாடவைத்ததைத் தமது திருப்பதிகங்களில் அகச்சான்றாகக் கூறுகின்றார்கள் அருளாளர்கள்.

உமாபதியின் ஆணைப்பிரகாரம் நாயன்மார்கள் தேவாரம் பாடினார்கள். அவை மூலமுதல்வனுக்குரிய அர்ச்சனைப் பாடல்களாகும். அர்ச்சனை என்பது இறைவனை அர்ச்சித்தல், வழிபடுதல் என்பது பொருள். எனவே சைவ ஆலயங்களில் நாம் திருமுறைகளை விண்ணப்பித்தே வழிபடல் வேண்டும். ஏன் நாம் இறைவனை வழிபட வேண்டும்? என்றொரு கேள்வி கேட்டால் "**எமக்கு இச்சரீரம் கிடைக்கப் பெற்றது இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்**" என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வாக்கை விடையாகக் கூறலாம். இக்கூற்றின்படி நாம் வேறு சரீரம் வேறு. நாம் என்பது உயிர். சரீரம் இவ்வுயிர் இறைவனை அடைய எமக்கு இறைவன் தந்த சாதனம். எனவே உயிர், உடல் வேறு வேறு. திருமுறைகளை விண்ணப்பித்துத் திருமுறைகளில் கூறியவற்றைக் கடைப்பிடித்து வணங்கினால் முத்தி இன்பம் நமக்குக் கிடைக்கும்.

ஞானசம்பந்தர் தமது பதினொராவது பாடலாகிய திருக்கடைக்காப்பில் பதிகம் தோறும் பதிகப்பலனைக் கூறுகின்றார். முதலாம் திருமுறை முதற்பதிகம் திருக்கடைக்காப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஒரு நெறியமனம் வைத்துணர் ஞானசம் பந்தன்உரை செய்த**
**திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே."** (1.1.11)

தான் உரைசெய்த, செய்கின்ற தமிழை "திருநெறியதமிழ்" அதாவது சிவநெறி கொண்டதமிழ், தெய்வத்தமிழ் எனக்கூறி அவற்றை ஓதுபவர்கள்தம் தொல்வினை "சஞ்சிதவினை", (சஞ்சித வினைதான் பிராரத்துவ வினைக்கு மூலமாகின்றது) தீர்ந்தால் பிறப்பு, இறப்பு இல்லை. பிறப்பின் விடுதலை முத்தி என்பதாம்.

நாவுக்கரசர் "**.... பாடுவார்பெறு வார்பர லோகமே**" (5.59.9) எனக் கூறுகின்றார். திருமுறைப் பாடல்களைப் பாடிப் பரவுபவர் பெறும் பாக்கியம் பரலோகம் என்கின்றார். தம்பிரான் தோழர் "...................... **ஆரூரன் உரைத்த தமிழ்**
**சொல்லுதல் கேட்டல்வல்லா ரவர்க்குந் தமர்க் குங்கிளைக்கும்**
**எல்லியும் நண்பகலும் இடர்கூருதல் இல்லையன்றே.**" (7.22.10)

பதிகங்களைப் பாடுவோர் மட்டுமல்ல பாடக் கேட்போர், மற்றும் சுற்றத்துக்கும் பிறவி எனும் இடர், துன்பம் இல்லை என்கின்றார்.

திருவாதவூர் அடிகள் திருவாசகத்தின் முதற் பாடலான சிவபுராணத்திலேயே திருவாசகத்திற்கு மட்டும் அல்ல முழுத் திருமுறைப் பாராயணத்துக்குமே பின்வருமாறு பயன் கூறுகின்றார்.

**"சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக் கீழ்ப்**
**பல்லோரு மேத்தப் பணிந்து.**"

பிறவா யாக்கைப் பெரியோரிடம் தாம்பெற்ற இன்பம் நாம் பெறவேண்டும் என்பதற்காக நாயன்மார்கள்

**"இம்மை யேதருஞ் சோறுங் கூறையும் ஏத்த லாம்இடர் கெடலுமாம்**
**அம்மை யேசிவ லோகம் ஆள்வதற் கியாதும் ஐயுற வில்லையே.**" (7.34.1)

என சிவனிடம் எமை ஆற்றுப்படுத்தலுக்கே பன்னிரு திருமுறைகளையும் ஆக்கித் தந்தார்கள்.

"**மந்திர நல் மாமறை**" (3.80.7) என பாலறாவாயர் திருமுறைகளைக் குறிப்பிடுகின்றார். "**வண்டமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்**" என திருநாவுக்கரசர் புராணம் 180இல் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். எனவே பன்னிரு திருமுறைகளும் தமிழ்வேதம், சாத்திரங்கள்தான் என்பதை ஆராய்வோம்.

தமிழ் இலக்கணம், தொல்காப்பியம் 480ஆம் சூத்திரத்தில் மந்திரம் என்பதற்கு வெவ்வேறு இலக்கணம் கூறுகின்றது. "**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப**"

மேலும் 640ஆம் சூத்திரத்தில் "**வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டது முதல் நூலாகும்"** என முதல் நூல் பற்றிக் கூறப்படுகின்றது. முதல் நூல் என்பது வேதத்தையும், சிவாகமத்தையும், சிவஞானபோதத்தையும் குறிக்கும்.

நிறைமொழி மாந்தர் என்போர் திரிகரண சுத்தி பெற்றோர் ஆவர். வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் நிர்மலன் ஆகி பசு கரணங்கள் எலாம் பதி கரணங்களாய் வாய்க்கப்பெற்றோரின் அறிவு ஞானஅறிவு. இது வேதமோதும் இறைவனுக்குப் பொருந்தும். மற்றும் ஞானக் கூத்தனால் ஆட்கொள்ளப்பட்ட சிவனடியார்களையும் குறிக்கும்.

இறைவனால் நாயன்மார்கள் ஆட்கொள்ளப்படுகின்ற கணத்திலேயே அவர்களின் உயிரில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. வினைகள் அற்ற நிர்மலத்தன்மை, திரிகரண சுத்தி, பசு கரணங்கள் எல்லாம் பதி கரணங்களாக மாறுகின்ற தன்மை ஆகியவற்றைக் காணலாம். இம் மாற்றம் தடுத்தாட்கொண்ட புராணம் 1.5.106இல் சேக்கிழார்

**"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள வளப்பரும் கரணங்கள் நான்கும்**
**சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந் திருந்து சாத்து விகமே யாக......**

எனக் குறிப்பிடுகின்றார். ஆளுடையபிள்ளையார்தமை ஞானப்பால் கொடுத்து **"ஞானசம்பந்தர்"** என ஆட்கொண்டும், மருணீக்கியாரைச் சூலை கொண்டு **"நாவுக்கரசர்"** என அழைத்தும், நம்பியாரூரர்தமை ஓலைகாட்டி **"வன்தொண்டன்"** என நாமகரணம் செய்தும், திருவாதவூரரை தம் திருவடிதரிசனம் காட்டி **"மாணிக்கவாசகர்"** என அழைத்தும் ஆட்கொண்டார் வெள்ளிமலை மன்னவன். திருவெண்காடரை ஒரு காதற்ற ஊசி மூலம் **"பட்டினத்தடிகள்"** ஆக்கி, புனிதவதியாரை ஞானப்பழமாம் மாங்கனி கொண்டு **"காரைக்கால் அம்மையார்"** என போற்ற வைத்து ஆட்கொண்டு வினைகழித்து அடியார் முன்செய் தவப்பயனால் பசுகரணங்களை பதிகரணங்களாக்கி சிவஞான உணர்வூட்டி ஒரு நெறிய மனம் வைத்துணர்ந்து திருநெறிய தமிழ் பாட வைத்தான். அந்நிலையில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட நாயன்மார்கள் பெற்ற சிவஞான உணர்வின் தன்மையைத் தெய்வப்புலவர் சேக்கிழார் சம்பந்தர் புராணம் 6.1.70இல் இவ்வாறு கூறுகின்றார்.

**"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்."**

இந்நிலையை சிவஞானபோதம் சூத்திரம் 8இல் மெய்கண்டதேவர் இப்படிக் கூறுகின்றார்.

**"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்**
**டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே."**

இங்கு அன்னியம் இன்மையின் என்பது உயிருடன் இறைவனுக்கு ஏற்படும் அத்துவிதக் கலப்பைக் கூறுகிறது. அதாவது உயிர் சிவமாம் தன்மையைப் பெற்று நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலை விளக்கத்தை மணிவாசகப் பெருமான் தமது அச்சோப்பதிகம் முதற் பாடலில் தருகின்றார்.

**"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட**
**அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே."** (8.51.1)

மூலமுதல்வனால் ஆட்கொள்ளப்படும் சிவனடியார்கள் சிவமாம் தன்மைதனைப் பெறுமாறை அப்படியே தன்னிலை விளக்கமாக தந்துள்ளார் மணிவாசகப் பெருந்தகை.

நாயன்மார்கள் ஆட்கொள்ளப்படும் பாங்கை வாகீசப் பெருமான் இவ்வாறு கூறுகின்றார்.

**"இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி**
**யிடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்**
**தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்**
**சிவலோக நெறியறியச் சிந்தை தந்த....."** (6.54.4)

இதனை உமாபதிசிவாசாரியாரின் கொடிக்கவி முதலாம் பாடலில்

**"ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்**
**றொளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க் குயிராய்த்**
**தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே**
**குளிக்கு முயிரருள் கூடும் படிக் கொடி கட்டினனே."**

எனவே சிவ அருளாளர்கள் மலவாதையில் இருந்து இறை அருளால் விடுபட்டு சிவ ஞான உணர்வு மேலோங்க நிறைமொழி மாந்தராய், வினையின் நீங்கி விளங்கிய அறிவுடன் சிவமாம் தன்மை பெற்று நின்றதனைப் புறச் சான்றுகள் மூலமும், அகச்சான்றுகள் வாயிலாகவும் அறிந்து கொண்டோம். இதனால்தான் தேவாரங்கள் தே+வாரம் - இறைவன் வசிக்கும் இடம். (வாரம் இடப்பெயர்-மலையடிவாரம்-தாழ்வாரம் என்பன போல்) எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. நாவுக்கரசர் **"மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்"** (6.8.5) மனத்தகத்தில் உள்ளவன் வாக்கில்(தேவாரப் பாடல்களில்) வசிக்கின்றான் என்கின்றார்.

இத்தகைய சிவஞான மெய்ஞான உணர்வாளர்களில் இறைவன் அத்துவிதமாகி நின்று தனது வாக்காகப் பாடிய பன்னிரு திருமுறைகளும் தமிழ் மந்திரங்களே. தமிழில் எழுதப்பட்ட பாடப்பட்ட தமிழ்வேதங்களே. எனவே பன்னிரு திருமுறைகளும் சிவத்தமிழர்களால் பூசிக்கப்படவேண்டிய போற்றப்படவேண்டிய பாதுகாக்கப்படவேண்டிய திருநிறை செல்வங்களே, திருநெறியதமிழாகுமாம்.

**"நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறும் மந்திரம்**
**தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே"** திருமந்திரம் 85ஆம்பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைரவர் வழிபாடு

சித்தாந்தரத்தினம் பத்மினி இராஜேந்திரா.

பிள்ளையாரைப் போலவே பைரவப் பெருமானும் ஆற்றோரங்களிலும், மரவடிகளிலும் அமர்ந்திருந்து அருளுகின்றார். அவர் கிராமத் தெய்வம், காப்புத் தெய்வம். பைரவர் சிவகுமாரர் நால்வரில் ஒருவர். ஆதலால் சாட்ஷாத் சிவபெருமானே அவர். பைரவர் தோற்றம் மூவேறு தடவைகளில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் மூன்றும் ஆதிக்கிரமமான செயல்களில் ஈடுபட்டவரை நிக்கிரகஞ் செய்யத் தோன்றிய உக்கிர மூர்த்தங்களாய் இருத்தல் காணலாம்.

1. பிரமன் தன் தலைகள் ஐந்தில் நடுத்தலையால் சிவ நிந்தை செய்தபோது அத்தலையைத் தடிந்து அவனை நிக்கிரகஞ் செய்தார்.

**"பிரமன் தன் சிரமரிந்த பெரியோய் போற்றி"** (6.32.10)

2. சிவ பக்தர்தளைத் துன்புறுத்த வந்த கயாசுரன் என்ற ஆனையை (காசியில்) நிக்கிரகஞ் செய்தார்.

**"மாலாகி மதமிக்க களிறு தன்னை**
**வதை செய்து மற்றதனின் உரிவை கொண்டு**
**மேலாலுங் கீழாலுந் தோன்றா வண்ணம்**
**வெம்புலால் கைகலக்க மெய்போர்த் தானே"** (6.4.8)

3. இரணிய வதத்தினாற் கர்வங்கொண்ட நரசிங்கவடிவினராகிய விஷ்ணுவைத் தோலுரித்து நிக்கிரகஞ் செய்தார்.

**"விரித்த பல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை**
**தரித்ததோர் கோல கால பயிரவ னாகி வேழம்**
**உரித்துமை யஞ்சக் கண்டு வொண்டிரு மணிவாய் விள்ளச்**
**சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே"** (4.73.6)

இவை மூன்றும் அப்பர் தேவாரங்கள். இம்மூன்று வைபவத்திலும் சிவனிடமிருந்து பைரவர் தோன்றியுள்ளமை குறிக்கப்பெற்றது.

அக்கினி புகை போர்த்தது போல் செந்நிற மேனியின் மீது புகைநிற ஆனைத்தோல் போர்த்தவராக பைரவ வர்ணனை கந்தபுராணம் கூறுகிறது.

**"வெஞ்சினப் பரியழன்மீது போர்த்திடு**
**மஞ்சனப் புகையென வால மாமெனச்**
**செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாணிக்**
**கஞ்சுகக் கடவுள டிபாற் கழல்களேத்து வாம்."** 541

கடம்பவன புராணத்தில் வரும் பைரவ துதியொன்று அவர் சிவன் நெற்றியில் தோன்றி, விஷ்ணுதோலைச் சட்டைசெய்து அணிந்து, வேதமாகிய நாய் வாகனத்தில் உலாவும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கடவுளைக் காணமுன் உன்னைக்காண்

இ. கணேசராசா (வாழ்நாள் மாணவன்)

மதங்கள் மாந்தரை மாண்புறச் செய்யவே மலர்ந்தன. அவை பரந்த திசை, இடம், கால தேசம், வாழ்க்கைப் பண்பு என்பவற்றுக்கு ஏற்பவே விதந்துரைக்கப்பட்டன. அந்த வகையில் மதத்தின் அருளாளர்கள், தம்மதத்தின் உண்மைக் குரலை, தமது காலத்திற்கு ஏற்ப கூறினார்கள். ஆயினும் அவை எக்காலத்துக்கும் பொருந்துவனவாக அமைந்திருக்கக் காணலாம். மதத்தைக் கையிலெடுத்து மதம்பிடித்த மதவாதிகளே அவற்றின் புனிதத்தைக் கெடுத்து வருகின்றனர். இன்று மதத்தை ஆன்மிக வாழ்விற்கு ஆதாரமாக்காது லௌகீக வாழ்விற்குப் பயன்படுத்துபவர்களால் மதம் நலிவுறுகின்றது.

உலகம், உயிர் இவ்விரண்டிற்கும் தொடர்பாக உள்ள போகம் தனது விசையை உயிரின் பக்கத்தில் இருந்து உலகப் பக்கம் திரும்பியதால் உயிர் நலியத் தொடங்கியுள்ளது. கடவுளின் திருவிளையாடலால் உயிரில் மனித அறிவு கவர்ச்சிஉலகின் இழுப்பில் இழுப்புண்டு இழுபடுகின்றது. அழகான, கவர்ச்சியான, பெறக்கூடிய எந்தப் பொருளும், மனிதனை மயக்கி ஆட்கொண்டுவிடும். இந்த மயக்கம் அன்று தொட்டு இன்று வரை மனிதனை விடவேயில்லை. அதனால்தான் அழுது அழுது பிறந்து பிறந்து அழுந்தி அழுந்தி வலிமை என்ற பெயரில் மெலியோனாகி நிற்கின்றான். இத்தகைய வாழ்வு விட்டு இன்ப வாழ்வு பெறக் கூறும் வழிகள் பல உள்ளன. அவற்றுள்

தாண்டகவேந்தனாகிய நாவுக்கரசர் தனது வாக்கிலே கூறிய பாடல் ஒன்று,

**பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்**
**போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்**
**பரிந்தார்க் கருளும் பரிசுங் கண்டேன்**
**பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்**
**விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்**
**மெல்லியலும் விநாயகனுந் தோன்றக் கண்டேன்**
**மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்**
**வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே.** (6.77.8)

இப்பாடலைச் சமய உரையாளர்கள் கூறுவது போல் பார்க்கின் - பொருத்தமில்லாத அலங்காரம் கொண்ட இறைவனைப் போற்றி இசைபாடி விண்ணவர்கள் வணங்கக் கண்ட நாவுக்கரசர் உமையும் விநாயகனும் தோன்ற அருள்காட்டி நிற்கின்ற கோலம் கண்டேன் எனக் கூறுகின்றார்.

ஆனால் இன்று நாம் வாழும் உலகின் காலத்தில் காணும் ஒருவர் சிந்தனை எமக்கு வழிகாட்டக் கூடும். அதாவது மனித வாழ்விற்குப் பொருத்தமில்லாத அல்லல்பட்டு அலைக்கழியும் லௌகிக வாழ்க்கை மிகமிக மலிந்து இருக்கக் கண்டேன். இதனால் லௌகிக வாழ்வில் சிக்கிக்கொள்ளாதவர் அத்தகையவர்களைப் போற்றிப் பாடிப் புகழ்வதைக் கண்டேன். அவ்வாறு வாழ்பவர்கள் தமக்கு வேண்டிய வாழ்வின் ஓட்டத்தால் இரந்து நின்று பரிசு பெறுகின்றார்கள். அந்தப் பரிசு மண், நீர் என பஞ்ச பூதங்களாகக் கிடைக்கின்றது. அவ்வாறு பெற்ற கிடைத்ததை விருந்தாகக் கருதி அதன்பேறாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை தனது உயிர்விடிவுக்கான மருந்தாக்கி தனது பிறவிப்பிணியை நீக்க வழிகண்ட போது மென்மையான அன்பும் மேலான அறிவும் தோன்றி என்னை ஆட்கொள்ள நான் திருவாய்மூர் இறைவனைக் கண்டேன்.

இங்கு பரந்துவிரிந்த பூதங்கள் உயிரை மயக்கி வசப்படுத்த விரிந்து கொண்டே போகும். அவற்றில் மயங்காது விருந்தாக அளவாக உயிரின் உணவாக மருந்துபோல் அனுபவித்து உயிரை ஆனந்தப்படுத்தி வாழ்வோம். பட்டம் பதவி அதிகாரம் பலம் ஆசை எல்லாம் அல்லல்படுத்தும். அன்பும் மேலான அறிவும் மனிதத்தை வளர்க்கின் இன்பம் பெருகும். இதுவே நாவேந்தரின் நுண்ணிய கருத்தாகும்.

13ஆம் பக்கத் தொடர்ச்சி..

நிலையைத் தெரிவிக்கின்றது. சீர்காழிப் புராணத்தில் பைரவ துதியில் நரசிம்மத்தை உரித்து எடுத்த தோலை அரையிற் சுற்றியிருப்பதும், தன்னால் உரிக்கப்பட்ட விஷ்ணுவின் எலும்புகளால் அமைந்த தண்டம் ஒன்றைக் கையிற்கொண்டிருப்பதும், தோலினாற் சட்டையிட்டு சட்டைநாதன் என்றிருக்கும் நிலையைத் தெரிவிக்கின்றன.

மேற்கூறிய இலட்சணங்களுடன் பைரவர் உடுக்கு, சூலம், கபாலம் ஏந்தியிருத்தலும், நிர்வாணியாயிருத்தலும், அக்கினிச் சுவாலைபோல் மேல் நோக்கி உயர்ந்த செஞ்சடை கொண்டிருத்தலும், 'ஹூம்' என்று அதட்டும் பயங்கர முகத்தோடிருத்தலும், கோரப்பல் விளங்க இருத்தலும், சர்ப்ப அரைஞாண், சர்ப்ப உத்தரியம் பூண்டிருத்தலும் ஆகிய லட்சணங்கள் சிவாகம தியான சுலோகங்களிற் கூறப்படுகின்றன.

பைரவர்க்குள்ள பல்வேறு நாமங்களில் க்ஷேத்திரபாலர் என்ற நாமம் பிரபல்யமானது. அவர் பண்பாக அறியப்படும் பிரத்தியேகமான, உக்கிரத்தன்மை அவர் காவற்றொழில் தகைமை உள்ளவரெனக் காட்டும். யாகாதி கர்மங்களிலும், ஷேத்திரங்கள், நகரங்கள், கிராமங்கள் அமைக்கும் வேளைகளிலும் அவரைக் காவல் தெய்வமாக அமைத்துக் கொள்வர்.

பைரவரின் எட்டு அடிப்படைத் தோற்றங்களாவன :

| | | |
|---|---|---|
| பீஷணபைரவர், | அசிதாங்கபைரவர், | சண்டபைரவர், |
| உன்மத்தபைரவர், | சம்ஹாரபைரவர், | குருபைரவர், |
| குரோதபைரவர், | கபாலபைரவர் | ஆகிய எட்டுமாகும். |

"பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்" (கந்தபுராணம். 2 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி.

# சைவசமயம்
## மாணவர் அறிவுப் பெட்டகம்
(வினா விடை)

61. **1) கன்மமாவது யாது? 2) ஏன் அது ஆகந்துக மலம் என அழைக்கப்படுகிறது?**

1) கன்மம் என்பது உயிர் செய்யும் வினைகள். அவை நல்வினை (புண்ணியம்), தீவினைகள் (பாவம்) ஆகும். இவ்வினைகள் பசுவினை, சிவவினை என இருவகைப்படும்.

பசுவினையும் இருவகைப்படும்.

i) பசு நல்வினை - உயிர்களுக்குச் செய்யும் நல்வினைகள்

ii) பசுத் தீவினை - உயிர்களுக்குச் செய்யும் தீவினைகள். இதுபோல் சிவவினையும் இருவகைப்படும்.

i) சிவ நல்வினை - சைவநாற்பாதங்களில் சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றும் விதித்தவற்றைச் செய்தல் .

ii) சிவத்தீவினை - இம் மூன்று பாதங்களிலும் விதித்தவற்றைச் செய்யாதுவிடல்.

2) கன்மம் ஆன்மாவுடன் இடையில் தொடர்புபட்டதால் 'ஆகந்துக மலம்' என அழைக்கப்படும்.

62. **மூவகை வினைகளை விளக்குக.**

1) ஆகாமியம் (வருவினை) - முன்வினைப்பயனை நுகரும்போது செய்யப்படும் வினை.

2) சஞ்சிதம் (தொல்வினை) - நுகரப்படாது எஞ்சியிருக்கும் ஆகாமிய வினைகளின் குவியல். (வினைகள் பயன்தரும்வரை சூக்குமமாய்ப் புத்தி தத்துவத்தைச் சார்ந்து நிற்றல்)

3) பிராரப்தம் (ஊழ்வினை) - சஞ்சித வினைக்குவியலிலிருந்து ஒரு பகுதியை எடுத்து நிகழ் பிறவியில் ஊட்டப்படும் (அனுபவிக்கப்படும்) வினை.

63. **மூவகைப் பிராரப்த வினைகளும் எவை?**

1) இச்சை - இன்பத்தைத் தேடி அனுபவித்தல்.

2) பரேச்சை - இன்பதுன்பத்தைப் பிறர் ஊட்டுதல்.

3) அநிச்சை - தற்செயலாகவரும் இன்ப துன்பங்கள்.

64. **பிராரப்த வினைப்பயனை அனுபவிக்கும் மூன்று வகைகளும் எவை?**

1) ஆதிதைவிகம் - தெய்வத்தால் நிகழும் வினைப்பயன் .

2) ஆதியான்மிகம் - உயிர்களால் நிகழும் வினைப்பயன், நோய், முதுமை, துக்கம், அழுக்காறு, கள்வர் பகைவர்களால் வரும் சரீர வேதனை போன்றவை.

3) ஆதிபௌதிகம் - பஞ்சபூதங்களால் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்)வரும் வினைப்பயன். சூடு, குளிர் காற்று, மழை, புயல், சூறாவளி, சுனாமி, பூகம்பம், எரிமலைவெடிப்பு, இடி, மின்னல் போன்றவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. **ஆகாமிய வினைகள் மூன்றும் எவை?**

1) திருட்டம் - வினை செய்யப்பட்ட பிறவியிலே அனுபவிக்கும் வினைப்பயன். (அரசதண்டனை போன்றவை.)

2) அதிருட்டம் - வினை செய்யப்பட்ட பிறவியிலன்றி வரும் பிறவிகளில் அனுபவிக்கும் வினைப்பயன்.

3) திருட்டாதிருட்டம் - வினை செய்யப்பட்ட பிறவியிலும், அதன் பின்னரும், பாவம் செய்தோர் துன்பங்களை நினைந்து வருந்துவர்; புண்ணியம் செய்தோர் நினைந்து மகிழ்வர்.

66. **திருக்கார்த்திகை விரதம் எப்போது அநுட்டிக்கப்படுகின்றது?**

கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில்.

67. **கார்த்திகைத்தீபம் எப்போது எவ்வாறு கொண்டாடப்படும்?**

திருக்கார்த்திகை நாளில் முருகன் ஆலயங்களில் தீபங்கள்ஏற்றி வழிபடுதல் **குமாராலயத்தீபத்** திருவிழாவாகும். அடுத்தநாளாகிய பூரணைத்தினத்தில் வீடுகளிலும், ஏனைய ஆலயங்களிலும் தீபங்கள் ஏற்றிவழிபடுதல் **சர்வாலய** தீபத்திருநாளாகும்.

68. **திருவண்ணாமலையில் கார்த்திகைவிரதம் எவ்வாறு கொண்டாடப்படுகிறது?**

ஒரு பெரிய சமயவிழாவாக ஒருவாரம் எரியக்கூடிய விதத்தில் மிகப்பெரிய ஜோதியாகக் கார்த்திகைத்தினத்தில் தீபம் எரித்துக் கொண்டாடப்படும். திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபத்தைப் பலகோடிமக்கள் தரிசிக்கும் வாய்ப்பு இருப்பது தனிச் சிறப்பாகும்.

69. **கார்த்திகை விளக்கீட்டின் தத்துவ விளக்கம் யாது?**

புற இருள் களைந்து ஒளிபரப்பும் கார்த்திகை விளக்கீடு, அகஇருளை அகற்றி ஞானச் சுடர் பிரகாசிக்கச் செய்யும் தத்துவ விளக்கம் கொண்டது.

70. **திருக்கார்த்திகையின் சிறப்பைக் கூறும் தேவாரத்தை எழுதுக?**

"வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்."

71. **i) ஆணவம் என்ற மலம் குறிக்கும் பொருள் என்ன?**
**ii) இம்மலம் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகிறது?**

i) ஆன்மாவை அணுத்தன்மைப்படுத்துவது ஆணவம்.

ii) (1) இருள்மலம் - ஆன்மாவின் அறிவை மயக்கி இருள் படலம்போல் மறைத்து நிற்பது. இருள் தன்னை மட்டுமாவது காட்டும். ஆணவம் தன்னையும் காட்டாது; பிறவற்றையும் காட்டாது. எனவே இது இருளிலும் கொடியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பார் உமாபதிசிவாசாரியார்

"**ஒருபொருளும் காட்டா திருளுருவம் காட்டும்**
**இருபொருளும் காட்டாதிது.**" (திருவருட்பயன் 3.3)

(2) சகசமலம் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களிலும் என்றும் பிரியாமல் செம்பில் களிம்பு போலக் கலந்திருப்பது.
(3) மூலமலம் - மும்மலங்களுக்கும் மூலமாயிருப்பது.

72. **மார்கழித் திருவாதிரை நட்சத்திரம் ஏன் சிறப்பானது?**
மார்கழித்திருவாதிரையில் நடேசர் அபிஷேகம் நடைபெறுவதாலும், சிவனுக்குரிய நட்சத்திரம் திருவாதிரை என்பதாலும் அது சிறப்பானது.

73. **மார்கழித் திருவாதிரை விரதம் எவ்வாறு சிறப்புப் பெறுகிறது?**
மார்கழியில் ஒன்பது நாட்கள் திருவெம்பாவை பாடி விரதம் அனுட்டித்துப் பின் பத்தாவது நாள் அனுட்டிப்பது திருவாதிரை விரதமாகும். திருவாதிரைத் தீர்த்தம் என்னும் ஆருத்திரா தரிசனம் இந்நாளில் இடம்பெறும்.

74. **நடராசர் வடிவம் எதை உணர்த்துகிறது?**
இறைவனின் ஆனந்த நடனத்தையும், அவனின் ஐந்தொழில்களையும், பஞ்சாட்சரமந்திர மகிமையையும் உணர்த்துகின்றது.

75. **நடராசர் வடிவம் எவ்வாறு ஐந்தொழிலை விளக்குகிறது?**
(1) வலது பின்கையிலுள்ள துடி (உடுக்கை) - படைத்தல் தொழில்
(2) வலது முன்கையின் அபய முத்திரை - காத்தல் தொழில்
(3) இடது பின்கையிலுள்ள தீச்சுடர் - அழித்தல் தொழில்
(4) தூக்கிய இடது திருவடி - மறைத்தல் தொழில்
(5) ஊன்றிய வலது திருவடி - அருளல் தொழில்

76. **உலகத்துக்கு முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் எவை?**
முதற்காரணம் - மாயை
துணைக்காரணம் - திருவருட்சக்தி, வினைகள்.
நிமித்தகாரணம் - இறைவன்.

77. **மாயை என்பது யாது?**
மும்மலங்களில் இறுதியானது. உலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் முதற்காரணமானது. மாயை - மாயா எனப் பிரித்து மா - ஒடுங்குதல், யா - தோன்றுதல் (விரிதல்) எனப்பொருள் கொள்ளப்படுகிறது.

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்,
தர்மாசிரியர். சாமித்தம்பி பொன்னுத்துரை B.A.(சிறப்பு)

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்த எளிமைப்படுத்தலில் நாவலர் பெருமானின் பங்கு

சைவப்புலவர் சு. செல்லத்துரை

**"வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்"** என்பது திருமந்திரம். எமது சைவசமய முதனூல்களாகக் கொள்ளப்படுபவை வட மொழியில் வேத சிவாகமங்களும், தமிழில் பன்னிரு திருமுறைகள், மெய்கண்டசாத்திரங்கள் என்பனவுமாகும்.

**"வேதாந்தத்துச்சியிற் பழுத்த சைவசித்தாந்தச் செழுங்கனி"** என்பது அருளாளர்வாக்கு. வேதத்தின் அந்தமாக இருப்பது வேத ஞானகாண்டப் பகுதியாகிய உபநிடதங்கள். உபநிடதம் எனப்படுவது குருவின் அருகில் இருந்து கேட்கப்பட்டது எனப் பொருள்தரும். ஞான குரு சீடனுக்குச் செய்த உபதேசங்களே சைவசித்தாந்தத்தின் மூலமாயுள்ளன.

உபநிடதங்களில் சொல்லப்பட்ட சைவசித்தாந்தச் சிந்தனைகள் அடுத்த கட்டத்தில் சிவாகமங்களாகி அக்கருத்துக்கள் தமிழில் பன்னிரு திருமுறைகளின் உட்பொருளாகி சைவ இலக்கியங்களாக மலர்ந்தன.

கி.பி.7ஆம் நூற்றாண்டு தொடக்கம் மலர்ந்த பன்னிரு சைவத் திருமுறைகளின் உட்பொருளாக வியாபித்திருந்த சைவசித்தாந்தக் கருத்துக்கள் 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் தமிழில் மெய்கண்ட சாத்திரங்களாக மலர்ந்தன.

சைவத் திருமுறைகளின் உட்கிடையாக இருந்த சைவசித்தாந்தக் கருத்துக்களை உய்த்துணர்வதில் ஏற்பட்ட தெளிவின்மையாலும், சைவசித்தாந்தத்துக்குப் புறம்பான பல சமய தத்துவங்கள் வந்து கலந்து மயக்கத்தைச் செய்ததாலும் சைவசித்தாந்தக் கருத்துக்களைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை 13ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது.

திருக்கயிலாய பரம்பரையில் வந்த புறச் சந்தானாசாரியர்களால் சைவசித்தாந்தக் கருப்பொருளாய முப்பொருள் உண்மை தமிழில் தர்க்க நியாய முறைப்படி திட்பநுட்பமாக மெய்கண்ட சாத்திரங்களாகச் செய்யப்பட்டன. இப்பணியில் முதல்வரான மெய்கண்டார் சிவஞானபோதத்தை 12 சூத்திரங்களும் 81 உதாரண வெண்பாக்களும் கொண்டு செய்தார். இதுவும் சாமானியர்களால் அறிதற்கரிதாக இருந்ததால் மெய்கண்டாரின் மாணாக்கரான அருணந்திசிவாசாரியார் அதனை 328 விருத்தங்களில் சுபக்கமாகச் செய்தார். அவர் வழிவந்த மாணவராகிய உமாபதிசிவாசாரியார் 100 விருத்தங்தளில் சிவப்பிரகாசமாகவும், 100 குறள் வெண்பாக்களில் திருவருட்பயனாகவும் செய்தார். இவ்வழியில் மெய்கண்டசாத்திரங்கள் பதினான்கு கிடைத்தன.

காலத்துக்குக் காலம் எளிமைப்படுத்தப்பட்டு வந்தாலும் இவை தமிழ்ப்புலமையாளரால் அறியப்படத்தக்கனவாகவே இருந்தன. சைவ ஆதீனங்கள் காலத்துக்குக் காலம் பலவித உரை விளக்கங்களைச் செய்துவந்தபோதும் தமிழில் மொழியறிவு குறைந்தவர்களுக்கு முழுப்பயன்தரவில்லை. இக்குறைபாட்டை நீக்குவதற்காகவே நாவலர் பெருமான் இதனை எளிமைப்படுத்தி வினா விடைகளாகத் தந்தார்.

சைவசித்தாந்தம் போதனைக்கு மட்டும் உள்ள தத்துவம் அல்ல; அது சாதனைக்கும் உரியது. சாதனையாகக் கொண்டால்தான் உண்மைப் பயன்தரும் என்பது தெளிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் பெருமானின் சைவ வாழ்வு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஈழத்துச் சைவசித்தாந்த மரபில் வந்தவர். ஈழத்துச் சைவசித்தாந்த மரபு நாமறிந்தவரையில் திருநெல்வேலி ஞானப்பிரகாசரில் தொடங்குகின்றது. இவர் சமய வாழ்வு வாழ்ந்தவர். சைவசித்தாந்த விளக்கம் செய்த ஈழத்து முதல் தமிழ் அறிஞர். 16, 17ஆம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்தவர். பசுக்கொலைக்கு அஞ்சிப் பரதேசம் போனவர் எனப் போற்றப்படுபவர். வடமொழியிலும் தமிழிலும் பல சைவசித்தாந்த விளக்க நூல்களை எழுதியவர். காசியில் துறவு பூண்டு சிதம்பரத்தில் குளம் வெட்டி, மடம் கட்டி சைவ முனிவராகத் திகழ்ந்தவர்.

இவருடைய மரபில் 19ஆம் நூற்றாண்டில் (1822-1879) தோன்றி வாழ்ந்தவர்தான் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். இவரும் தமிழுக்கும் சைவத்துக்கும் செயற்கரும் பன்முகப் பணிகள் செய்து அதன்படி வாழ்ந்து காட்டியவர். இவர் வேதசிவாகம சித்தாந்த மரபை வளர்த்தவர். தன் பின்னும் இவ்வழியில் பல மாணாக்கர்களை உருவாக்கி இன்றுவரை நாவலர் மரபை நிலை பெற வைத்தவர்.

**ஒவ்வொருவரும் தத்தம் சமயம் இதுவென்றும் அச்சமயக் கடவுள் இவரென்றும் அவர் அருள்புரியும் முறை இதுவென்றும் அவரை வழிபடும் முறை இதுவென்றும் தெளிந்து அதன்படி வாழவேண்டும்** எனக் கூறி அதன்படி சைவசமய வாழ்வு வாழ்ந்து காட்டியவர்.

சைவசமய வாழ்வு சைவசித்தாந்த பரிபாஷையில் **எழில்ஞான பூசை** எனப்படும். இதனைச் சிவஞானசித்தியார்

**ஞானநூல்தனை ஓதல்ஓதுவித்தல்**
**நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் நன்றா**
**ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்**
**இறைவன்அடி அடைவிக்கும் எழில் ஞானபூசை.......**

எனச் சிவஞானசித்தியார் விளக்கம் தருகின்றது. நாவலர் பெருமான் இவ்வகையில் தன் வாழ்வை எழில் ஞானபூசையாகவே வாழ்ந்து காட்டினார்.

## நாவலர் பெருமானின் நூலாக்கப்பணி

இவருடைய சமய நூலாக்கப் பணிகளால் சைவத்தின் உயர்வை உலகம் அறிந்தது. சைவ மக்கள் சிவாகம அறிவும் ஒழுக்கமும் உள்ளவர் ஆயினர், சைவசமயக் கல்வி, சைவசமய ஒழுக்கம், சைவ அறிவு ஆகிய மூன்றும் வளரத் தலைப்பட்டன.

நாவலர் பெருமான் எழுதிப் பதிப்பித்த சைவசமய நூல்களில் சைவ வினாவிடைகள், பால பாடங்கள், பெரியபுராண சூசனம், சைவ அனுட்டானவிதி, யாழ்ப்பாணச் சமய நிலை, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் என்பன பிரதானமானவை.

செய்யுள் வடிவில் இருந்தவற்றை வசன நடையில் எழுதிப் பதிப்பித்தவற்றுள் பெரியபுராண வசனம், கந்த புராண வசனம், திருவிளையாடல் புராண வசனம், சிவாலய தரிசனவிதி, கொலை மறுத்தல் ஆகியவை அடங்கும்.

உரை எழுதிப் பதிப்பித்த நூல்களில் கோயிற் புராணம், சைவசமயநெறி, பெரியபுராணம் (ஒருபகுதி), திருமுருகாற்றுப்படை என்பன அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு கிறிஸ்து மத கண்டனங்களும் அடங்கும். இவையெல்லாம் சைவசமய உண்மைகளை அறிந்து அதன்படி வாழ உதவின என்பது வெளிப்படையானது.

## நாவலரின் சைவ வினா விடைகள்.

சைவ மக்களுக்கு மெய்கண்ட சாத்திரங்கள், சைவத்திருமுறைகள், புராணங்கள் என்பவற்றிலுள்ள உண்மைக் கருத்துக்களையெல்லாம் இலகுவான வினாவிடையாக எழுதித் தந்த நாவலரின் ஆற்றல் வியக்கத்தக்கது. முதலாம் சைவவினாவிடை 135 வினாக்களையும், விடைகளையும் கொண்டது. இரண்டாம் சைவ வினா விடை 418 வினாவிடைகளைக் கொண்டது, பெரியவர்களுக்கானது. சைவவினாவிடை ஒன்றின் விரிவாகவே இரண்டாம் சைவ வினாவிடை அமைந்துள்ளது.

ஆதலால் இரண்டாம் சைவ வினாவிடையில் இடம்பெறும் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் சிந்தனைகளே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

14 மெய்கண்ட சாத்திரங்களிலே வினா வெண்பா என்பதும் உண்மை விளக்கம் என்பதும் உபநிடதங்கள் போல் மாணாக்கன் வினாவுக்குக் குருமூர்த்தி விடைபகர்வதாகவே அமைந்தவை. அவற்றை அடியொற்றியும் தான் வாழ்ந்த காலத்துத் தமிழ் மக்களின் மொழித்திறனுக்கு ஏற்பவும் நாவலர் பெருமான் சைவ வினாவிடையை இலகுவான வசன நடையிலேயே எழுதிப் பதிப்பித்தார். வினாவிடைகள் இலகுவானவையாகத் தெரிந்த போதிலும் அவற்றின் உட்பொருள் சிந்திப்பவர்க்கு ஆழமான விசாலமான சைவசித்தாந்த அறிவைத் தரவல்லன.

நல்ல விதைகளை நிலத்தில் போட்டுவிட்டால் அவை உரிய பருவகாலத்தில் முளைத்து விளைவு தருவது போலப் பிள்ளைப்பருவத்தில் இச் சைவ சித்தாந்த வினாவிடைகளை மனதில் பதித்துவிட்டால் பிள்ளைகள் பெரியவராகும் போது இக்கருத்துக்கள் மனதில் விளைந்து பூரண அறிவு விளக்கத்தைத் தரும் எனும் நாவலர் பெருமானின் உத்தி எண்ணி எண்ணி வியந்து போற்றுதலுக்குரியது.

சுருங்கச் சொன்னதை விரிவாக்கிச் சொல்வது இலகு. ஆனால் விரிவாக அதுவும் தர்க்க முறைப்படி சொல்லப்பட்டவற்றை இரத்தினச் சுருக்கமாகச் சொல்வது பேரறிஞர்க்கன்றிச் சாதாரண அறிவுடையோரால் ஆகக்கூடியதல்ல. சைவ வினாவிடை மூலம் நாவலர் தரும் சைவ சித்தாந்த ஞானம் வியக்கத்தக்கது அல்லவா?

இரண்டாம் சைவ வினாவிடை பதி இயலில் தொடங்கி அன்பியல் வரை 16 இயல்களில் சைவ சமய வாழ்வியல் உண்மைகளை விபரிக்கின்றது. இங்கு முப்பொருள் பற்றிய பதி இயல், பசு இயல், பாச இயல் எனும் மூன்று இயல்களுமே சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

## பதி இயல்

உலகத்துக்குக் கருத்தா யார்? எனத் தொடங்கி மகேஸ்வர வடிவங்கள் எவை என்பதுவரை 23 வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் உள்ளன. இவற்றுள்,

1. **உலகத்துக்குக் கருத்தா யாவர்?** சிவபெருமான்.
2. **சிவபெருமான் எப்படிப்பட்டவர்?** என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகவே பாசங்களில் நீங்கியவர், என்றும் மகிழ்ச்சி உடையவர், தன்வயமுடையவர்.

3. **சிவபெருமான் செய்யும் தொழில்கள் எவை?**

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்துமாம்.

4. **சக்தியாவது யார்?** அக்கினியோடு சூடு போலச் சிவத்தோடு பிரிவின்றி உள்ளதாகிய வல்லமை.

இவற்றுக்கும் இது போன்ற தொடர்ந்துவரும் வினாக்களுக்கும் மூலம் எங்கிருக்கிறது என்று பார்த்தால் சிவஞானபோதத்தில் காணலாம்.

சிவஞானபோதத்தின் பிரமாண இயலின் முதற் சூத்திரம் இவ்வாறு விளக்குகிறது.

**"அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்**
**தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்."**

**இதன் பொருள்:** அவன் அவள் அது என்று சொல்லப்படும் உலகத்தொகுதி தோன்றுதல், நிலைபெறுதல், ஒடுங்குதலாகிய முத்தொழில் உடைமையால் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டு, சங்கார காலத்தில் சங்கரிக்கும் கடவுளிடத்தில் ஒடுங்கும். ஒடுக்கப்பட்ட ஆன்மாக்களின் ஆணவ மலம் பரிபாகப்படாமையால் மீண்டும் அக்கடவுளிடத்தில் அவை தோன்றும். ஆகவே உலகத்துக்குக் கருத்தா கடவுளே.

இதனையே சிவஞானபோதத்தின் வழி நூலாகிய சிவஞான சித்தியார்

**"ஒருவனோடொருத்தி ஒன்றென்று உரைத்திடும் உலகம் எல்லாம்**
**வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே**
**தருபவன் ஒருவன் வேண்டும் தான் முதல் ஈறுமாகி**
**மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே."**

என்று கூறுகின்றது.

**இதன்பொருள் :** ஒருவன் ஒருத்தி ஒன்று என்று கூறப்படும் சேதன, அசேதனப் பிரபஞ்சம் எல்லாம், தோன்றும் முறையில் தோன்றி, நின்று ஒடுங்குதலும் உடைமையால், அவற்றைத் தோற்றுவித்து நிலைபெறச் செய்து ஒடுக்கும் கருத்தா ஒருவன் வேண்டப்படும். அக்கருத்தா தனக்கொரு முதல்வன் இன்றித் தானே எவற்றிற்கும் நிமித்த காரணனும், சங்கார காரணனுமாகிய இயல்பாகவே பாசத் தொடர்பற்றுள்ள மெய்ஞ்ஞானமாகிய சக்தி வடிவத்தைக் கொண்டு நின்று அம் முத்தொழில்களையும் செய்தருளுவார்.

இதேபோன்று தொடர்ந்துவரும் பகுதிக்கும் அடுத்துவரும் சூத்திரங்களே இடமாக இருப்பதைக் காணலாம்.

தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள் நாயனார்

சித்தாந்தரத்தினம் பத்மினி இராஜேந்திரா

சேது நாட்டின் தலைநகர் திருக்கோவலூராகும். அந்நகரத்தில் மலாடர் என்ற மரபினர் வாழ்ந்து வந்தார்கள். உமையொரு பாகனாகிய சிவபெருமானிடம் அவர்கள் அன்புகொண்டு வழிவழித் தொண்டு புரிந்துவரும் சைவப்பரம்பரையினர். அந்த மலாடர் மரபில் மலையமான் வழிவந்தவரான ஒரு வேந்தர் சிறந்து விளங்கினார். வேத ஆகமங்களின் உண்மையை அறிந்தவரும், சிவபிரானிடம் மிகுந்த பேரன்பு கொண்டவருமாவார். அவர் சிவனடியார்களின் திருவேடத்தையே மெய்ப்பொருளாகக் கருதி வந்ததால், அவரை அந்நாட்டு மக்கள் மெய்ப்பொருள் நாயனார் என்றே அழைத்து வந்தனர்.

சிவபெருமானின் திருக்கோயில்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் பூஜை, ஏழிசைப்பாடல், திருவிழா முதலியன சிறப்புடன் நடைபெறுவதற்காக அவர் பெரும் பொருட்களைக் கொடுத்துத் திருப்பணிகள் செய்துவந்தார். சிவனடியார்களைத் தவிர வேறு பற்றுதல் ஏதும் இல்லாதவராக, தாம் தேடிய பொன், பொருள், செல்வம் முதலியனவற்றை, அவர் தம்மிடம் வரும் சிவனடியார்களுக்கு மகிழ்ச்சியுடன் குறைவற அளித்து வந்தார்.

இவ்வாறு மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களின் வடிவத்தையே மெய்ப்பொருள் என்று நம்பி, அடியார்களுக்குப் பணிபுரிந்து நல்லாட்சி செய்துவரும் நாட்களில், முத்தநாதன் என்ற ஓர் அரசன் அவர்மீது பகைமை பூண்டு அவரை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொள்ள வேண்டும் என்று பேராசைப்பட்டு அவன், சேது நாட்டின் மீது பலமுறை படையெடுத்தான். ஒவ்வொரு போரிலும் முத்தநாதன், மெய்ப்பொருள் நாயனாரிடம் தோற்றுத் தன் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை யாவற்றையும் இழந்து அவமானம் அடைந்தான்.

இவ்வாறு பலமுறை தோற்றுப்போன முத்தநாதன், இனிமேல் சூழ்ச்சி முறையிலேயே மெய்ப்பொருள் நாயனாரை வெல்லவேண்டும் என்று துடித்தான். மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களின் திருவேடத்தையே மெய்ப்பொருள் என நம்பி அடியார்களிடம் மெய்யன்பு கொள்ளும் மனப்பாங்கு உடையவர் என்பதை அவன் அறிந்தான்.

எனவே அவன் ஒருநாள் திருக்கோவலூருக்கு மறைமுகமாக வந்து சேர்ந்து, தன் நெற்றியிலும், உடலெங்கும் விபூதி தரித்து, தலையிலுள்ள சடையைச் சுருட்டிக் கட்டினான். தன் உடைவாளை புத்தகக் கவுளி ஒன்றில் மறைத்துக்கட்டி, அந்த புத்தகக்கட்டை தூக்கிக்கொண்டு, சிவனடியார் போன்று பொய்த் தவவேடத்துடன் மெய்ப்பொருள்நாயனார் அரண்மனை வாசலையடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிற்காவலாளர்கள் முத்தநாதனைச் சிவனடியார் என நினைத்து, அவனைக் கைகூப்பி வணங்கி, உள்ளே வரும்படி அழைத்தனர். உள்ளே நுழைந்து இறுதி வாயிலையடைந்தபோது, அவ்வாயிற் காப்போனாகிய தத்தன் என்பவன், "வேந்தன் துயில் கொண்டுள்ளார். நீர் சமயம் அறிந்து போகவேண்டும்" என்றான். "நான் அவருக்குச் சாஸ்திர உபதேசஞ் செய்யப்போகின்றேன் நீ என்னைத் தடுக்கலாகாது" என முத்திநாதன் கூறிவிட்டு உள்ளே புகுந்தான். மெய்ப்பொருள் நாயனார் கட்டிலில் நித்திரை செய்ய, அவர் மனைவியார் பக்கத்தில் இருக்கக் கண்டும் சமீபத்திலே சென்றான்.

அதனைக் கண்ட மனைவியார், மெய்ப்பொருள் நாயனாரை எழுப்பியதும், நாயனார் அவனை வணங்கி, "சுவாமீ தாங்கள் இங்கே எழுந்தருளக் காரணம் யாது?" என வினவினார். அதற்கு முத்தநாதன் "உங்கள் இறைவன் முன்பு இயற்றியருளிய ஆகமநூல்களுள் முதன்மையான நூல் என்னிடம் இருக்கிறது. இந்த அபூர்வமான நூலை உமக்குப் போதிப்பதற்காகக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான்.

நாயனார் உடனே சிவபெருமான் அருளிச் செய்த அந்த ஆகமத்தை வாசித்து அருளும்படி கேட்டார். "அந்நூலை வாசிக்கும்போது நீரும் நானும் மட்டுமே தனித்து இருக்க வேண்டும். மாலை சூடிய மனைவி இங்கே இருக்கக்கூடாது" என்று கூறினார்.

உடனே வேந்தர் தன் மனைவியாரை போகும்படி செய்துவிட்டு, பொய்வேடங்கொண்ட முத்தநாதனை ஆசனத்தில் இருத்தி, இனி அருளிச்செய்யும் என்றார். முத்தநாதன் அக்கவுளியில் மறைத்து வைத்திருந்த உடைவாளை எடுத்து, அவரைக் குத்த, அவர் சிவவேடமே மெய்ப்பொருள் என்று அவனை வணங்கினார். உடைவாளினால் குத்தப்பட்டு இரத்தம் சொரிய விழப்போகின்ற மெய்ப்பொருள் நாயனார், விழும்போது 'தத்தனே இவர் சிவனடியாராதலால் இவருக்கு ஓரிடையூறும் இல்லாமல், வழியில் இவருக்கு ஒருவரும் இடையூறு செய்யாதபடி இவரை அழைத்துக்கொண்டு போய் விடு' என்று சொன்னார்.

தத்தன் இவனை அழைத்துக் கொண்டு போனபோது மக்கள் முத்தநாதனை தாக்க வந்தபோது 'இந்தச் சிவபக்தனுக்கு ஒருவரும் இடையூறு செய்யாமல் அனுப்பும்படி வேந்தனே கூறினார்' என்று கூறி தத்தன் அவனுடைய நாட்டுக்கு அருகில் அவனை விட்டுவிட்டு, நகருக்கு திரும்பி மெய்ப்பொருள் நாயனாரிடம் ஓடோடிவந்து, முத்தநாதனுக்கு ஒரு இடையூறும் இல்லாமல் அனுப்பிவைத்த செய்தியைக் கூறினான். அதைக்கேட்ட மெய்ப்பொருள்நாயனார் 'இன்று நீ எனக்கு செய்த உதவியை வேறுயார் செய்யவல்லார்' என்று கூறித் தமக்குப்பின் அரசாள்வதற்குரிய குமாரர்களையும், மந்திரி முதலானவர்களையும் நோக்கி, சைவாகமவிதிப்படி விபூதி மேல் அன்பைப் பாதுகாக்கும்படி போதித்து, கனகசபையிலே ஆனந்தத்தாண்டவம் செய்தருளுகின்ற சபாநாதரைத் தியானம் பண்ணினார். அப்பொழுது சபாநாதர் மெய்ப்பொருள் நாயனாருக்குக் காட்சிகொடுத்து அவரைத் தம்திருவடியில் சேர்த்தருளினார்.

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்"

\- சுந்தரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறட் கதைகள்.

# நல்லவர் பகையும் நலம் புரியும்

**அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு**

திருக்குறள் - 787

**உண்மை நட்பினர் தம் நண்பனை எப்போதும் நல்வழிப்படுத்துவர். அவனுக்கு ஏதேனும் துன்பம்வரின் தாம் உடனிருந்து அத்துன்பத்தை அனுபவிப்பர் என்பது.**

இந்த இனிய கருத்தைப் புலப்படுத்தும் இரண்டு கதைகள் இவை!

நட்பு என்பது ஒரு முக்கியமான குணம். நட்பு என்ற ஒன்று திருவள்ளுவருக்கு 10 குறள் கொண்ட ஓர் அதிகாரத்தில் அடங்கவில்லை. அவர், தவம், பெருமை, ஊழ் முதலியவைகளுக்கெல்லாம் ஓவ்வோர் அதிகாரமே அமைத்தார். நட்புக்கு மட்டும் ஐந்து அதிகாரங்கள் அமைத்துக் கொண்டார். நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு என்ற ஐந்து அதிகாரங்களில் ஐம்பது குறட்பாக்களால் நட்பினை நலம் பெற நவின்றார் செந்நாப்போதார்.

திருவள்ளுவர் கூறிய இந்நட்பின் தகைமையை ஔவையாரும் பின்வரும் வெண்பாக்களால் இனிது இயம்பினார்.

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க**
**நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ**
**டிணங்கி யிருப்பதுவும் நன்று.**

**தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற**
**தீயார்சொல் கேட்பதுவுந் தீதே - தீயார்**
**குணங்கள் உரைப்பதுவுந் தீதே அவரோ**
**டிணங்கி யிருப்பதுவும் தீது.**

இனி, உத்தம குணம் பொருந்திய நல்லவர் பகைப்பினும் நலமே புரிவர். இதனைப் பின்வரும் வரலாற்றினால் அறிக.

**நாகநாதன்** என்று ஒரு வேதியன் இருந்தான். அவன் வறியவன். ஒரு குறுநில மன்னனிடஞ் சென்று வேத வேதாந்தங்களைக் கூறி மகிழ்வித்தான். வேதியனுடைய கலை நலங்கண்டு களிகொண்ட அம்மன்னவன் சிறந்த மாணிக்கம் ஒன்றைப் பரிசாக வழங்கினான். அதனை எடுத்துக் கொண்டு பூசுரன் புறப்பட்டான். **ஆகுகன்** என்ற வேடன் நல்ல உள்ளம் படைத்தவன். "இந்த மறையவன் சில நேரம் ஏதோ கூறி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை மதிக்க முடியாத மாணிக்கத்தைப் பெற்றுப் போகின்றானே; நான் சென்று அதனைக் கவர்வேன்" என்று கருதி வேதியனைத் தொடர்ந்து சென்றான். மாலை நேரம்; பெருங்காடு.

வேடன், "ஏ வேதியனே! நில்" என்றான். வேதியன் திடுக்கிட்டான். மனங்கலங்கி நின்றான். "அந்தோ! என் உயிர் பிரியுமே? என் செய்வேன்?" என்று ஏங்கினான். வேடன் நெருங்குவதற்குமுன் மாணிக்கத்தை வாயில் போட்டு விழுங்கி விட்டான்.

வேடன் வேதியனை நெருங்கி, "மாணிக்கத்தைக் கொடு" என்றான்.

"அப்பா! என்னை இடர்ப்படுத்தாதே; இதோ பார் மாணிக்கம் என்பால் இல்லை."

"மாய வித்தை கற்ற மறையவனே! மன்னவன் தந்த மாணிக்கம் எங்கே சென்றது? உன் உயிரை மாய்ப்பேன்; உண்மையை உரை; வயிற்றைப் பிளப்பேன்."

"உத்தம குணம் பொருந்திய வேடனே! என்பால் மாணிக்கம் இல்லை. என்னை வருத்தாதே."

இவ்வாறு இருவரும் வழக்காடி நிற்கும் தருணம் அங்கு நான்கு கள்வர்கள் வந்தார்கள்; அவர்கள் கத்தியுங் கட்டாரியுந் தாங்கிக் கால தூதர்கள் போல் நின்றார்கள்.

"ஏய்! இருவரும் நில்லுங்கள்; மாணிக்கம் யாரிடம் உள்ளது? உண்மையை உரையுங்கள். இல்லையேல் உங்களைச் சித்திரவதை புரிவோம்" என்றார்கள்.

வேடன் உள்ளம் உலைந்தது. "அந்தோ! இவ்வேதியன் வேதம் ஓதினவன். இவனை நம்பி இவன் குடும்பன் இருக்குமே! நம்மால் இவன் இறக்க நேர்கின்றதே. இந்தப் பாவத்துக்கு நாம் தானே காரணம்" என்று எண்ணி இரங்கினான்.

"கள்வர்களே! உங்களுக்கு வணக்கம். மாணிக்கம் வயிற்றிலிருக்கக் கூடியதா? இதுவரை எங்காவது எவர் வயிற்றிலாவது மாணிக்கத்தைக் கண்டிருக்கின்றீர்களா? மலம் சலந்தானே இருக்கும். இவரும் நானும் நண்பர்கள். நட்புரிமையால் விளையாட்டாக மாணிக்கம் வயிற்றிலிருப்பதாக உரையாடினோம். உங்கட்குச் சந்தேகம் இருந்தால் என் வயிற்றைக் கீறிப் பாருங்கள். என் வயிற்றில் மாணிக்கம் இல்லையாயின் இவர் வயிற்றிலும் இல்லையென்று எண்ணிக்கொள்ளுங்கள். வீணாக இருவரையுங் கொல்லுதல் வேண்டாம்" என்றான்.

கள்வர்கள் கத்தியெடுத்து வேடன் வயிற்றைக் கீறிப் பார்த்தார்கள். குருதியும் குடலும் மல சலமும் தான் இருந்தன; வேடன் இறந்தான்! வேதியனைப் பார்த்து "ஏய்! இங்கு நில்லாதே. ஓடிப்போ" என்று விரட்டி விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியன், "ஆ! இப்படியும் ஓர் உத்தமன் உலகத்தில் உளனோ? நம்மிடம் உள்ள மாணிக்கத்தைக் கவர வந்த இவ்வேடன், நம்மைக் காக்கும் பொருட்டுத் தன்னுயிரைத் தந்தான். இவன் மனிதருள் மாணிக்கம்" என்று வேடனது நற்குணத்தை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்துச் சென்றான்.

ஆதலால், நல்லவர்கள் பகைக்கினும் நலமே புரிவார்கள்.

தீயவர் நட்பாக இருப்பினும் அவர்களால் நமக்குத் தீமையே விளையும். இதனை விளக்கும் பின்வரும் வரலாறு.

ஒரு மன்னவன் ஒரு குரங்குடன் நட்புக் கொண்டு அதனை அரண்மனையில் சீருஞ் சிறப்புஞ் செய்து வைத்துக் கொண்டிருந்தான். குரங்குக்கு நல்ல சொக்காய், தொப்பி, அணிகலன்கள், இனிய உணவு யாவுந்தந்து அன்புடன் பழகி வந்தான்.

ஒருநாள் மன்னன் பகலில் அரண்மனையில் அம்சதூளிகா மஞ்சத்தில் படுத்தான். குரங்கை அருகில் ஒரு நாற்காலியில் அமர்த்தி வைத்தான்; காவலன் கண்ணுறங்கிவிட்டான்.

மன்னவன் கழுத்தில் ஓர் ஈ வந்து அமர்ந்தது. ராஜபக்தியும், நட்புரிமையும் பூண்ட குரங்குக்குப் பெருஞ்சினம் மூண்டது. ஆ! ஆ! என்ன அநியாயம்? மலத்தின் மீது அமர்கின்ற இந்த ஈ, நம் மன்னவருடைய மகிமையை உணராமலும் மதிக்காமலும், இவருடைய கழுத்தின் மீது அமர்ந்திருக்கின்றதே. அரசருடைய வாழ்விலும் பெருமையிலும் கவனமுள்ள நான் கண்டு சும்மா இருக்கலாமா? நமக்குப் பல நலங்களும் தந்த பார்த்திபனுக்கு நாம் நன்றி செலுத்த இதுவே தருணம் என்று எண்ணி, அரசன் அருகில் இருந்த கூரிய உடைவாளை எடுத்து, அரசர் பெருமானுடைய கழுத்தில் இருந்த ஈயை ஓங்கி வெட்டியது. குரங்கினுடைய அரச பக்தி அரசனை எமபுரத்துக்கு அனுப்பிவிட்டது.

அறிவில்லாத அற்பக் குரங்கின் நட்பு, அரசன் உயிருக்கு இறுதியைத் தந்தது.

எனவே, தீயவர் நட்பு நமக்குத் தீமையே பயக்கும். மூடர்கள் நலம் என்று கருதிச் செய்யும் செயல் பெருங் கேட்டினைத் தரும் என உணர்க.

இந்த இரு வரலாறுகளையும் அடியில் வரும் நீதி வெண்பா நமக்கு உணர்த்துகின்றது.

அறிவன் பகையேனும் அன்புசேர் நட்பாம்
சிறுவன் பகையான் செறிந்த - அறிவுடைய
வென்றி வனசரன்தான் வேதியனைக் காத்தான்முன்
கொன்றதொரு வேந்தைக் குரங்கு.

தெய்வத்திரு திருமுருக
கிருபானந்த வாரியார் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருவாசகத்துக்கு உரைசொன்னவர்கள்

முருகவே பரமநாதன்

**முன்மொழிவு:**

தாய் மொழியாம் தமிழை நிராகரித்துவாழும் ஓர் இனமாய்த் தமிழ்நாட்டுத் தமிழர்களும், ஈழத்தமிழர்களும் விளங்குவதை நாம் கரதலா அமலக மெனக்காண்கின்றோம். இந்த இழப்பை ஆழமாய்ச் சிந்திப்பவரகள் அருகிப்போயின நிலைதான் இன்று. அஃதே போல சைவ சமயமும், அதன் தத்துவ மேம்பாடும் வீழ்ச்சி காண்பதும், சரிந்து போவதும் ஒரு பலவீனமான தரம்தான். இந் நிலைப்பாட்டினைக் கண்டு போராடுவோர், மீளக்கட்டியெழுப்ப முயலும் அபிமானிகள் சிந்தனைச் செல்வர்கள், செயற்றிறன் மிக்கோர் குறைந்த விழுக்காடு உள்ளவர்கள்தான். மொழி பற்றியும், இனம் பற்றியும், சமயம் பற்றியும் அதிகப் பிரசங்கித் தனமாய்ப் பேசியென்ன பயன்? வெளிநாட்டிற் குடியேறிய தமிழர்கள் மொழியை இழந்து கொண்டு வருவதைப் பெருமையாகக் கருதும் காலகட்டம் இது. சைவமும் தமிழும் அவை சார்ந்த பண்பாடு நாகரிகம், கலை கலாசாரம் என்பனவும் கைநழுவிப்போகவும் சைவநெறியின் பால் முக்கிய ஊடுருவல் கடந்த நூற்றாண்டுகளைவிட இருபதின் இறுதிக்காலம் (மிலேனிய துவக்கம்) வரலாற்றின் மிக்க மோசமான காலகட்டம் எனலாம். இந்தச் சீர்கேடு நல்ல அடையாளமாய்த் தெரியவில்லை பலருக்கு.

**சிந்திக்கச் செய்யும் செய்தி**

இக்கண்ணோட்டத்தில் தமிழில் எழுந்த இலக்கிய வளங்கள் சீண்டுவாரின்றி பேசா ஏடுகளாய்க் கிடக்கின்றன. படிப்போர், வாசிப்போர் தன்னாலே குறைந்தும் போயினர். இந்தத் தூர்வு நன்மை பயக்குமா? தமிழில் எழுந்த மொழித்துறை இலக்கிய இலக்கண பாரகாவியங்கள் எம்கருவூலங்கள், அஃதே போல சைவத் திருமுறைகள், தோத்திர சாத்திர, தத்துவங்கள் சுயமாகவே படித்து அறியக் கூடியனவுமன்று. எனவே இவற்றுக்கு உரைகள், தத்துவ விளக்கங்கள், பாஷ்யங்கள் தேவைப்பட்டன. இத்துறை சார்ந்த இயக்கவாளர்களை இரு நிலையில் பிரித்துப் பார்ப்பர் தேர்ந்த கல்வி வல்லார்.

உலகில் மக்கள் அறியுமாறு உண்மையுணர்த்தும் ஆசிரியர் இரு பெரும் பிரிவினுள் அடங்குவர். அவருள் வினையினீங்கி விளங்கிய அறிவினையுடையார் ஒருவகையார், அம்மெய்யறிவுடையரல்லராய் அளவை முறைப்படி நுணுகி ஆராய்ந்து அறியும் கல்வியறிவினையுடையார் மற்றொரு வகையார். இவ்விரு வகையினருள் இந்நூலாசிரியராகிய திருவள்ளுவர் போன்றார் முதற் பிரிவினருள் அடங்குவர். தமிழ் இலக்கண இலக்கிய நூல்களுக்கு உரையாசிரியர்களாய் உரையெழுதிய ஆசிரியர் இளம் பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் முதலியவர்கள் இரண்டாவது பிரிவினுள் அடங்குவர். இவர்கள் ஆழ்ந்தகன்ற நுண்ணிய ஆராய்ச்சி அறிவுடையவர்களாவார்கள்.

திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும்,
பதிப்புரை கழகப்பதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்குறள் உரைவளம்**

மேலே குறிப்பிடப்பட்ட உரையாசிரியர் வரிசையிற் பேராசிரியரும் சேர்த்துக் கொள்ள வேண்டியவர். திருக்குறளுக்கே உரை வகுத்தோர் பதின்மர். அவர்களுள் பரிதியார், மணக்குடவர் உரைகள் மேலானவையெனச் சான்றோர் கணித்துள்ளனர். பரிமேலழகரின் உரைச்சிறப்பை இருபாடல்களால் நாம் உணரலாம்.

**திருத்தகு சீர்த் தெய்வத்திருவள்ளுவர்தம்**
**தருத்தமைதி தானே கருதி - விரித்து ரைத்தான்**
**பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனும்**
**மன்னு முயர் நாமன் வந்து.** உரையாசிரியர் வரிசையில்

**பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள**
**நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ - நூலிற்**
**பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்**
**தெரித்தவுரை யாமோ தெளி.** உரைச்சிறப்புப் பாயிரம்

இந்த உரைவிளக்கம் இன்று மிகமிக முக்கியமாய்த் தெரிகிறது. பத்துப்பேர் திருக்குறளுக்கு உரை கண்ட பின்னரும் பலர் புதிய உரை எழுதியுள்ளனர். நாமக்கல் கவிஞர் C. வரதராஜன் போன்றோர் முழு உரை கண்டனர். ரா. நெடுஞ்செழியன், பாரதிதாசன், கருணாநிதி போன்ற சிலரும் தொட்டம் தொட்டமாகப் புத்துரை கண்டுள்ளனர். மேலாந்தரமுள்ள நூல்களுள் திருக்குறளும் ஒன்றாகும்.

**வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே**
**தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளியசீர்த்**
**தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்**
**தண்டமிழின் மேலாந் தரம்.** உமாபதிசிவனார்

உரையாசிரியர் மரபிலே வந்த பலர் தமிழகத்திலும், தமிழீழத்திலும் தோன்றி அருந் தொண்டாற்றியுள்ளனர். வேங்கடசாமி நாடார், இளமுருகனார், வேற்பிள்ளை வாத்தியார், இலக்கிய கலாநிதி மு. கந்தையனார், பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கம் போன்றோர் இவ்வரிசையிற் சிலராவர். திருமந்திரமும், சிவவாக்கியர் பாடல் போன்ற பல பிரபந்தங்கள் உரையின்றி ஓதமுடியாதனவாம். திருமந்திரத்துக்கு இராமநாதன், G. வரதராசன் போன்றோர் உரைதந்துள்ளனர்.

**திருமுறைகளும் உரையின் இன்றியமையாமையும்**

பல தலைமுறைகளாகத் திருமுறைகளுக்கு உரை எழுதக் கூடாதென்ற கருத்து நிலவியதாகத் தெரிகிறது. இதனாலே கற்று வல்லாரைத் தவிர மற்றையோர் இவற்றைப் படிக்கவும், அறியவும், அறிந்து ஓதவும் முடியாமற் போயிற்று. சைவ சித்தாந்தங்கட்குப் பலர் விரிவுரை செய்துள்ளனர். அஃதே போலத் திரு.வி.க. பெரியபுராணத்திற்கு அரும்பதவுரையெழுதிய நூல் வெளியானது. திருத் தொண்டர் புராணத்திற்கு C.K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எழுதிய விரிவுரை பல பாகங்களாக வெளிவந்துள்ளன. மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளையவர்கள் தாயுமானவர் பாடல்களுக்கு உரை வகுத்துள்ளமை யாவரும் அறிந்ததே. இதையடுத்து சித்தாந்த சரபம் அஷ்டவதானம் பூ.வை. கலியாணசுந்தர முதலியார் அவர்களால் தாயுமானவர் பாடல்களுக்கு மெய்கண்ட விருத்தியுரை எழுதப்பட்டு சைவசித்தாந்த நூற் பதிப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த உரைகளின் உதவி கொண்டே சாதாரண மக்களும் பாரிய கனதியான நூல்களைப் படிக்கவும் அறியவும் வாய்ப்பு ஏற்பட்டது. செய்யுள் நடையை வசன நடையாக்கியவர் நாவலர் பெருமான். அதனாலேதான் வசனநடை கைவந்த வல்லாளர் என மேலோரால் அழைக்கப்பட்டார். அவர் சாதனைப் படுத்திய கந்தபுராணபடனம் அக்காலத்திலே பல பௌராணிகர்களை உருவாக்கியது. தமிழிலே எழுந்த வைணவ பக்திப் பனுவலாகத் திகழ்வது திருநாலாயிரமென அழைக்கப்படும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். இதற்குப் பெரியவாச்சான்பிள்ளை எழுதிய உரை வைணவ உலகிலே சாலச் சிறந்தது. எண்ணாயிரப்படி, பதினாறாயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பத்திரண்டாயிரப்படி போல்வன திருநாலாயிர வியாக்கியானங்களாம். முருகன் மீதெழுந்த பக்திப் பனுவல்களை பன்னிரு திருமுறையாய்த் தொகுத்த தணிகைமணி செங்கல்வராய பிள்ளையவர்கள் உரையும் எழுதியுள்ளார். முருகபக்தர் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் அருணகிரியார் செய்த முருக இலக்கியங்கட்குச் சிறந்த உரை செய்துள்ளார். இதே தொண்டில் திருமுறைகளை உரையோடு வெளியிடும் பணியில் வித்துவான் நாராயணவேலுப்பிள்ளை அவர்கள் ஈடுபட்டுள்ளார்.

**திருவாசக உரை எழுத மறுப்பு**

இலக்கணக் கொத்து, தசகாரியம், திருச்செந்திற் கலம்பகம் போன்ற அரிய நூல்களை இயற்றிய திருவாவடுதுறை ஆதீனத்து சுவாமிநாததேசிகர் பெருமான் தேவாரம் திருவாசகம் போன்ற திருமுறைகளுக்கு உரையே எழுதக் கூடாதென்ற கொள்கையுள்ளவர் என அறிய முடிகிறது. இவரை அடியொற்றி மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணவர் தியாகராசா செட்டியாரும் உரை எழுதுவதை விரும்பவில்லை. கடவுள் மாமுனிவரும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களும் திருவாதவூரர் புராணத்தும், திருப்பெருந்துறைப் புராணத்தும் சில பாடல்களுக்கு விளக்கமும், சில பகுதிகட்குச் சந்தர்ப்ப விளக்கமும் தந்துள்ளனர். பிள்ளையவர்களின் தலை மாணாக்கரான வித்துவான் தியாகராசச் செட்டியார் அவர்களைத் திரிசிரபுரம் பட்டாபிராமப் பிள்ளையவர்கள் திருவாசகத்துக்கு உரையெழுதித்தர வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்கள். ஒருநாள் சீரங்கத்துக் காவிரிப் பாலத்தில் தியாகராசச் செட்டியார் அவர்கள் வந்துகொண்டிருந்தபோது பட்டாபிராமபிள்ளை வழக்கம்போல் வற்புறுத்தினார்.

ஸ்ரீமான் செட்டியார் அவர்கள், என்ன ஐயா! அதற்கு நானா உரை எழுதுவது? திருவாசகம் எங்கே? நான் எங்கே? அதற்கு உரை எழுதுவதற்கு என்னறிவு எம்மாத்திரம்? வேதம், ஆகமம், உபநிஷதம், புராணங்கள், சாஸ்திரங்கள் எல்லாம் தெரிந்தாலல்லவோ அதற்கு உரையெழுதமுடியும், இனியும் வற்புறுத்துவீர்கள் ஆனால் இதோ காவிரியில் விழுந்து உயிரை விட்டுவிடுவேன் என்றார்கள். இச் செய்தியை மகாமகோ பாத்தியாய ஐயரவர்கள், செட்டியாரவர்கள் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்கள். (பக்கம் 142-143)

திருவாசகம் குருவருள் விளக்கம் முகவுரை பக். IX, X

தொடரும் ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி....

# யாப்பிலக்கணம் (வினாவும் விடையும்)

## உறுப்பியலில் தளை

இதுவரை கடந்த வினா விடைகள் மூலம் சீரைப்பற்றிய வாய்பாடுகளைத் தெரிந்து கொண்டோமல்லவா?

மாச்சீர் என்பது நேர் ஈற்று ஈரசைச் சீர் ஆகும். விளச்சீர் என்பது நிரை ஈற்று ஈரசைச் சீர் ஆகும். காய்ச்சீர் என்பது நேர் ஈற்று மூவசைச் சீரெனவும், கனிச்சீர் என்பது நிரை ஈற்று மூவசைச் சீரெனவும் திரும்பவும் ஞாபகப் படுத்திக் கொண்டு, நாம் தளை காண்பதில் இவைகளின் பங்களிப்பினைப் புரிந்து கொள்வோம்.

**52. தளை எவ்வாறு காணப்படுகிறது?**

தளை பார்க்கும்போது நின்றசீர் இன்னதென்று பார்த்தல் வேண்டும். வருஞ்சீர் இன்னதென்று கவனிக்க வேண்டிய அவசியமில்லை. வருஞ்சீரின் முதலசையைக் கவனித்தாற் போதும். செய்யுளின் ஒவ்வொரு அடியிலும் ஒரு சீருடன் அடுத்து வருஞ்சீரின் முதலசையை ஒப்பிட்டு அவ்வடிகளிலே சீர்களின் இடைநின்று இசைத் தொடர்ச்சியுறுமாறு பிணித்தல் (தளைதல்) **தளை** எனப்படும். இதனைச் சுருங்கக் கூறுமிடத்து, செய்யுளின் ஒவ்வொரு அடியிலும் நின்ற சீரின் ஈற்றசை, வருஞ்சீரின் முதலசையும் ஒன்றுதலும், ஒன்றாமலும் பொருந்தி வருதல் தளை எனப்படும். நின்றசீர் மாச்சீரா, விளச்சீரா, காய்ச்சீரா, கனிச்சீரா எனத் தெரிந்தாற்றான் தளையானது இன்ன வகையென்று துணிந்து தீர்மானிக்க உதவும். இது பற்றி இனிவரும் வினா விடை மூலம் அறிந்து கொள்வோம்.

தளை என்பது பிணிப்பதாகும். பந்தமென்றும் சொல்லலாம்; பந்தம் - கட்டுதல், கயிறு எனப் பொருள்படும். மேலுந் தளை என்ற சொல்லுக்கு விலங்கு என்ற பொருளுமுண்டு. பசுக்கன்று, காளைகளின் கால்களைப் பிணைத்துக் கட்டுதலையும் தளைதல் எனக் கூறுவர்.

**53. தளை காணும் பொழுது நின்ற சீர் வருஞ்சீர் எனக் குறிப்பிடப்படுவது எதனைக் குறிக்கும்?**

உதாரணமாகப் "போது சாந்தம் பொற்ப வேந்தி" என்ற செய்யுளின் முதலடியை நோக்குவோமானால் போது என்ற சீர் நின்ற சீராகவும், இதனை அடுத்து வருஞ்சீர் "சாந்தம்" என்பது வருஞ்சீராகவும் இருக்கும். தளை காணும்போது நின்ற சீரான மாச்சீரின் இறுதியசை "து" வுக்கும், வருஞ்சீரின் முதலசை "சா" வுக்கும் தளை காணப்படும். இங்கே நின்ற சீர் எதுவெனவும், வருஞ்சீரின் முதலசை எதுவெனவும் குறிப்பிடப்படுவதை அறிக.

**54. தளைகளை ஏற்படுத்தும்போது ஒன்றியும் ஒன்றாமலும் பொருந்தி ஏற்படுகிறது என்ற கூற்றினை விளக்குக?**

உதாரணத்திற்குப் "போது சாந்தம் பொற்பவேந்தி" என்ற செய்யுளின் முதலடியை நோக்குவோம். இங்கே நின்ற சீரின் "போது" இதன் இறுதியசை "து" நேரசையாகும். வருஞ்சீரின் "சாந்தம்" இதன் முதலசை "சா" நேரசை ஆகும். இவ்விரு சீர்களுக்கும் இடையே தளைகாணும்போது நேரசையும் நேரசையும் ஒன்றுதல் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் "பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை" என்ற செய்யுளின் முதலடியையும் அவதானிப்போம். இங்கே "பாலுந்" என்ற நின்ற சீரின் இறுதியசை "லுந்" நேரசையாகும். இதனை அடுத்துத் தெளிதேனும் என்ற வருஞ்சீரின் முதலசை "தெளி" நிரையசை ஆகும். இங்கு தளை காணுமிடத்து நின்றசீரின் இறுதியசை நேரும் வருஞ்சீரின் முதலசை நிரையும் ஒன்றாமல் வந்து பொருந்துதல் நடைபெறும். இவ்விதமான நிகழ்வுகளையே தளை காணும் போது ஒன்றுதலும் ஒன்றாமலும் பொருந்தி வருதல் என்ற கூற்றினை விளக்குகிறது. ஒன்றுதல் - பொருந்துதல் ஒன்றாமை - பொருந்தாமை எனப்படும்.

**55. "வெண்சீர் விகற்பம் கலித்தளையாய் விடும்" என்பதை விளக்குக?**

வெண்சீர் நின்ற சீராகவும் அதன் இறுதி அசை நேருடன் (உதாரணம் - தேமாங்காய்) வருஞ்சீரின் முதலசை நிரையசையும் ஒன்றாமையாகிய விகற்பத்தால் உண்டாகும் தளை **கலித்தளை** ஆகும்.

இங்கே வெண்சீர் எனப்பட்டது மூவசைச்சீர் வாய்பாட்டில் இடம் பெறும் காய்ச்சீரான தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காயைக் குறிக்கும். இக் காய்ச்சீரின் இறுதியசை நேரசையாக விளங்க வருஞ்சீரின் முதலசை நிரையசையோடு ஒன்றாமையாகிய விகற்பம் ஏற்படுவதைக் குறிக்கும். அதாவது காய்ச்சீருக்கு முன்நிரை வருதல் கலித்தளை ஆகும். இது தளைகளில் ஒன்றாக விளங்கும் கலித்தளையை விளக்குவதாய் இருப்பதைக் காணலாம்.

**56. விகற்பம் என்றால் என்ன?**

நேரசையோடு நேரும், நிரையசையோடு நிரையும் பொருந்தி வரும் விதிக்கு விரோதமாக அமையும் விதியாகும். வி - விரோதம், கற்பம் - விதி எனப்படும்.

**57. "வஞ்சி வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்து" என்ற கூற்றினை விளக்குக?**

வஞ்சிச்சீர் நின்றசீராக (தேமாங்கனி, புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனியாக) விளங்க இதன் ஈற்றசை கனிக்கு(நிரை) இதற்கு அடுத்து வருஞ்சீரின் முதலசை விகற்பமாய் (விரோதமாய்) ஒன்றுதல் **வஞ்சித்தளை** ஆகும். இது தன்னோடு தான்சேரும் விதிக்கு (நிரை, நிரை) இதற்கு மாறாகவரும் நிரையும் நேரும் வந்தொன்றுதலையே மீண்டும் நாம் "வஞ்சி வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்து" என விளங்கிக் கொள்வோமாக.

**58. அலகிடுதல் என்றால் என்ன?**

செய்யுளின் எழுத்து, அசை, சீர், தளை என்பனவற்றைப் புலப்படும்படி பிரித்துக் காட்டுதலாகும்.

**59. செய்யுளில் வரும் 7 தளைகளும் எவை?**

1) நேரொன் றாசிரியத் தளை.
2) நிரையொன் றாசிரியத் தளை.
3) இயற்சீர் வெண்டளை.
4) வெண்சீர் வெண்டளை.
5) கலித்தளை.
6) ஒன்றிய வஞ்சித்தளை.
7) ஒன்றாத வஞ்சித்தளை. எனத் தளைகள் 7 வகைப்படும்.

தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி...

# அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்

## திருநாவுக்கரசுநாயனார் - திருவதிகை வீரட்டானம்

6ஆம் திருமுறை திருவடித் திருத்தாண்டகம்

திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

1. **அரவணையான் சிந்தித் தரற்றும் அடி**
**அருமறையான் சென்னிக் கணியாம் அடி**
**சரவணத்தான் கைதொழுது சாரும் அடி**
**சார்ந்தார்கட் கெல்லாம் சரணாம் அடி**
**பரவுவார் பாவம் பறைக்கும் அடி**
**பதினெண் கணங்களும் பாடும் அடி**
**விரவுநீர்த் தென்கெடில நாடன் அடி**
**திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.**

(ப-ரை) அரவணையான் - பாம்புப் பாயலையுடைய திருமால், சிந்தித்து - நினைந்து, அரற்றும் அடி - கதறிப் பரவும் திருவடி; அருமறையான் - அரிய வேதங்களையுடைய நான்முகனது, சென்னிக்கு - தலைக்கு, அணியாம் அடி - அழகு செய்கின்ற திருவடி, சரவணத்தான் - முருகக்கடவுள், கைதொழுது - வணங்கி, சாரும் அடி - சேருகின்ற திருவடி, சார்ந்தார்கட்கு எல்லாம் - அடைந்தார்கட்கெல்லாம், சரணாம்அடி - அடைக்கலமாகின்ற திருவடி, பரவுவார் பாவம் - வழிபடுகின்றவர்களது பாவத்தை, பறைக்கும் அடி - ஒழித்தருளுகின்ற திருவடி, பதினெண் கணங்களும் - பதினெட்டு வகையான கணத்தவர்களும், பாடும் அடி - பாடித்தொழுகின்ற திருவடி, விரவு நீர் - மிக்க நீர்ப்பெருக்கினையுடைய, தென் கெடிலம் - தெற்கின் கண்ணதாகிய கெடில நதி சூழ்ந்த, நாடன் அடி - திருநாட்டினையுடையவனாகிய இறைவனது திருவடி, திருவீரட்டானத்து - திரு அதிகைத் திருவீரட்டானத்தில் எழுந்தருளிய, எம் - எம்முடைய, செல்வன் அடி - அழியாத முத்தித் திருவினையுடைய சிவனது திருவடி என்றவாறு.

2. **கொடுவினையார் என்றுங் குறுகா அடி**
**குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும் அடி**
**படுமுழவம் பாணிப யிற்றும் அடி**
**பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்த அடி**
**கடுமுரணே றூர்ந்தான் கழற்சே வடி**
**கடல்வையங் காப்பான் கருதும் அடி**
**நெடுமதியங் கண்ணி அணிந்தான் அடி**
**நிறைகெடில வீரட்டம் நீங்கா அடி.**

(ப-ரை) கொடுவினையார் - தீவினையாளர்கள், என்றும் - எப்போதும், குறுகாஅடி - அணுகப்பெறாத திருவடி, குறைந்து அடைந்தார் - பணிந்து அடைந்தவர், ஆழாமை - நரகக் குழியில் அழுந்தாவண்ணம், காக்கும் அடி - காக்கின்ற திருவடி, படுமுழவம் - ஒலியினைச் செய்கின்ற முழவு வாத்தியத்தை, பாணி பயிற்றும் அடி - கரதாளத்தோடு பயில்விக்கின்ற திருவடி, பதைத்து எழுந்த - துடித்தெழுந்த, வெம் கூற்றை - கொடிய காலனை, பாய்ந்த அடி - உதைத்தருளிய திருவடி, கடுமுரண் - பெருவலியினையுடைய,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறு ஊர்ந்தான் - இடபத்தை ஊர்ந்தருளுகின்ற இறைவனது, கழல்சேவடி - வீரக்கழலை யணிந்த சிவந்த திருவடி, கடல்வையம் - கடல் சூழ்ந்த உலகத்தை, காப்பான் - காத்தருள்கின்ற திருமால், கருதும் அடி - சிந்திக்கின்ற திருவடி, நெடுமதியம் கண்ணி - நீண்ட பிறையாகிய மாலையை, அணிந்தான் அடி - அணிந்தவனுடைய திருவடி, நிறை - நீர் நிறைந்த, கெடில வீரட்டம் - திருக்கெடில வீரட்டானத்தை, நீங்கா அடி - என்றும் விட்டு நீங்காத திருவடி என்றவாறு.

3. **வைதெழுவார் காமம்பொய் போகா அடி**
**வஞ்சவலைப் பாடொன் றில்லா அடி**
**கைதொழுது நாமேத்திக் காணும் அடி**
**கணக்கு வழக்கைக் கடந்த அடி**
**நெய்தொழுது நாமேத்தி ஆட்டும் அடி**
**நீள்விசும்பை ஊடறுத்து நின்ற அடி**
**தெய்வப் புனற்கெடில நாடன் அடி**
**திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.**

(ப-ரை) வைது எழுவார் - இகழ்ந்தெழுகின்றவர்களது, காமம்பொய் - காமமும் பொய்யும், போகா அடி - செல்லாத திருவடி, வஞ்ச வலை பாடு - கரவாகிய வலையிற்படுதல், ஒன்று - ஒரு சிறிதும், இல்லா அடி - இல்லாத திருவடி, நாம் - அடியோங்களாகிய நாங்கள், கை தொழுது - வணங்கி, ஏத்தி - புகழ்ந்து, காணும் அடி - காணப்பெறுகின்ற திருவடி, கணக்குவழக்கை - கணக்கு வழக்குகளை, கடந்த அடி - தாண்டின திருவடி, நாம் - நாங்கள், தொழுது ஏத்தி - வணங்கிப் போற்றி, நெய் ஆட்டும் அடி - ஆனின் நெய்யால் ஆட்டுவிக்கின்ற திருவடி, நீள் விசும்பை - நீண்ட ஆகாயத்தை, ஊடறுத்துநின்ற அடி - ஊடுருவிச் சென்று நிலைபெற்ற திருவடி, தெய்வம் புனல் - தெய்வத்தன்மை பொருந்திய நீரையுடைய, கெடில நாடன் அடி - திருக்கெடில நாடனது திருவடி, திருவீரட்டானத்து எம் செல்வன் அடி - திருவீரட்டானத்து எழுந்தருளிய எம் செல்வனது திருவடி என்றவாறு.

4. **அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும் அடி**
**அழகெழுதல் ஆகா அருட்சே வடி**
**சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த அடி**
**சோமனையும் காலனையும் காய்ந்த அடி**
**பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் அடி**
**பிழைத்தார் பிழைப்பறிய வல்ல அடி**
**திருந்துநீர்த் தென்கெடில நாடன் அடி**
**திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.**

(ப-ரை) அரும்பித்த - உதித்தலையுடைய, செம் ஞாயிறு - சிவந்த ஞாயிற்றை, ஏய்க்கும் அடி - நிகர்க்கும் திருவடி, அழகு எழுதல் ஆகா - தமதழகினை எழுத வொண்ணாத, அருள் சேவடி - அருண் மயமாகிய திருவடி, சுரும்பித்த வண்டினங்கள் - கரும்புகளோடு கூடிய வண்டுக் கூட்டங்கள், சூழ்ந்த அடி - சூழப்பெற்ற திருவடி, சோமனையும் காலனையும் - சந்திரனையும் இயமனையும், காய்ந்த அடி - சினந்த திருவடி, பெரும்பித்தர் கூடி - பெரிய பித்தர்களாகிய சிவனடியார் ஒருங்கியைந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதற்றும் அடி - தம் மனத்துக் கியைந்தவாறு பலபடப் பேசுகின்ற திருவடி, பிழைத்தார் - குற்றம் செய்தவர்களது, பிழைப்பு - தவற்றினை, அறியவல்ல அடி - உணரவல்ல திருவடி, திருந்து நீர் - திருத்தமாகிய நீரையுடைய, தென் கெடில நாடன் அடி - தெற்கின் கண்ணதாகிய திருக்கெடில நாடனது திருவடி, திருவீரட்டானத்து எம் செல்வன் அடி - திரு வீரட்டானத் தெழுந்தருளிய எம்முடைய செல்வனது திருவடி என்றவாறு.

5. ஒருகாலத் தொன்றாகி நின்ற அடி
ஊழிதோ றூழி உயர்ந்த அடி
பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும் அடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல அடி
இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும் அடி
இன்புற்றார் இட்டபூ வேறும் அடி
திருவதிகைத் தென்கெடில நாடன் அடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.

(ப-ரை) ஒரு காலத்து - ஒரு காலத்தில், ஒன்றாகி - ஒரே பொருளாய், நின்ற அடி - நிலைபெற்ற திருவடி, ஊழிதோறூழி - ஊழிக்காலங்கள் தோறும், உயர்ந்த அடி - உயர்ந்து நின்ற திருவடி, பொருகழலும் - வீரக்கழலும், பல் சிலம்பும் - பல சிலம்புகளும், ஆர்க்கும் அடி - ஒலிக்கின்ற திருவடி, புகழ்வார் புகழ் - தம்மைப் புகழ்ந்தோரது புகழினை, தகையவல்ல அடி - மேம்படுத்த வல்ல திருவடி, இருநிலத்தார் - பெரிய நிலவுலகத்தார், இன்புற்று - மகிழ்ந்து, அங்கு ஏத்தும் அடி - அங்கு துதிக்கின்ற திருவடி, இன்புற்றார் - மகிழ் சிறந்தார், இட்டபூ - சாத்திய மலர்கள், ஏறும் அடி - ஏறப்பெற்ற திருவடி, திருவதிகை - திருவதிகையிற் செல்லும், தென் கெடில நாடன் அடி - தெற்கின் கண்ணதாகிய கெடில நதி பாயும் நாட்டினையுடையவன் திருவடி, திருவீரட்டானத்து - திருவீரட்டானத் தெழுந்தருளிய, எம் செல்வன் அடி - எம்முடைய செல்வன் திருவடி என்றவாறு.

6. திருமகட்குச் செந்தா மரையாம் அடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் அடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற அடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல அடி
உருவிரண்டும் ஒன்றோடொன் றொவ்வா அடி
உருவென் றுணரப் படாத அடி
திருவதிகை தென்கெடில நாடன் அடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.

(ப-ரை) திருமகட்கு - திருமகளாகிய இலக்குமிக்கு, செந்தாமரையாம் அடி - செந்தாமரை மலராகின்ற திருவடி, சிறந்தவர்க்கு - மேலோர்க்கு, தேனாய் விளையும் அடி - தேனாய் விளைந்து தித்திக்கின்ற திருவடி, பொருளவர்க்கு - பொருளுடையோர்க்கு, பொன் உரையாய் - மாற்றுயர்ந்த பொன்னின் உரைபோல, நின்ற அடி - சிறந்து நிற்கின்ற திருவடி, புகழ்வார் புகழ்தகைய - புகழ்வோரது புகழினை மேம்படுத்தற்கு, வல்ல அடி - வன்மையுற்ற திருவடி, உரு இரண்டும் - ஆண் பெண் என்னும் இரண்டுருவங்களும், ஒன்றோடொன்று - ஒன்றினோடொன்று, ஒவ்வா அடி - பொருந்தாத

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருவடி, உரு என்று - திருவுருவமென்று, உணரப்படாத அடி - அறியப்பெறாத திருவடி, திருவதிகைத் தென் கெடில நாடன் அடி - தெற்கின் கண்ணதாகிய திருக்கெடில நாடனது திருவடி, திருவீரட்டானத் தெம் செல்வன் அடி - திருவீரட்டானத் தெழுந்தருளிய எம்முடைய செல்வன் திருவடி என்றவாறு.

7. **உரைமாலை எல்லாம் உடைய அடி**
**உரையால் உணரப் படாத அடி**
**வரைமாதை வாடாமை வைக்கும் அடி**
**வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும் அடி**
**அரைமாத் திரையில் அடங்கும் அடி**
**அகலம் அளக்கிற்பார் இல்லா அடி**
**கரைமாங் கலிக்கெடில நாடன் அடி**
**கமழ்வீரட் டானக் கபாலி அடி.**

(ப-ரை) உரைமாலை - சொன்மாலைகள், எல்லாம் உடைய அடி - எல்லாவற்றையும் உடைய திருவடி, உரையால் - சொல்லால், உணரப்படாத அடி - அறியப் பெறாத் திருவடி, வரை மாதை - மலைமகளை, வாடாமை - வாட்டமடையாமல், வைக்கும் அடி - வைக்கின்ற திருவடி, வானவர்கள் - தேவர்கள், வணங்கி வாழ்த்தும் அடி - வணங்கி வாழ்த்துகின்ற திருவடி, அரை மாத்திரையில் - அரை மாத்திரை யளவில், அடங்கும் அடி - அடங்குகின்ற திருவடி, அகலம் அளக்கிற்பார் - வியாபகத்தை இவ்வளவென்று அளக்க வல்லவர்கள், இல்லா அடி - இல்லாத திருவடி, கரைமா - கரையினிடத்து மாமரங்களையுடைய, கலி - ஆர்க்கின்ற, கெடில நாடன் அடி - கெடில நாட்டினையுடையவன் திருவடி, கமழ் வீரட்டானக் கபாலி அடி - நறுமணம் வீசுகின்ற திருவீரட்டானத் தெழுந்தருளிய கபாலியாகிய இறைவனது திருவடி என்றவாறு.

8. **நறுமலராய் நாறு மலர்ச்சே வடி**
**நடுவாய் உலகநா டாய அடி**
**செறிகதிரும் திங்களுமாய் நின்ற அடி**
**தீத்திரளாய் உள்ளே திகழ்ந்த அடி**
**மறுமதியை மாசு கழுவும் அடி**
**மந்திரமும் தந்திரமும் ஆய அடி**
**எறிகெடில நாடர் பெருமான் அடி**
**திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.**

(ப-ரை) நறுமலராய் நாறும் - நறுவிய பூக்களாய் மணங்கமழ்கின்ற, மலர்சேஅடி - மலர்போன்ற சிவந்த திருவடி, நடுவாய் - உலக நடுவாயிருந்து, உலகம் நாடாய அடி - எல்லா உலகங்களும் நாடுகளும் ஆகிய திருவடி, செறிகதிரும் - நிறைந்த கதிர்களையுடைய பகலோனும், திங்களுமாய் - சந்திரனுமாய், நின்ற அடி - நின்ற திருவடி, தீ திரளாய் - நெருப்புத்திரளாகி, உள்ளே திகழ்ந்த அடி - உள்ளே விளங்கின திருவடி, மறுமதியை - கறையோடு கூடிய சந்திரனை, மாசுகழுவும் அடி - அழுக்கினை யகற்றுகின்ற திருவடி, மந்திரமும் தந்திரமும் - மந்திரங்களும் தந்திரங்களும், ஆய அடி - ஆகிய திருவடி, எறிகெடிலம் - அலை வீசுகின்ற கெடில நதியையுடைய, நாடர் பெருமான் அடி - நாட்டவர்களுக்குத் தலைவனது திருவடி, திருவீரட்டானத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் செல்வன் அடி - திருவீரட்டானத் தெழுந்தருளிய எமது செல்வன் திருவடி என்றவாறு.

9. **அணியனவும் சேயனவும் அல்லா அடி**
**அடியார்கட் காரமுதம் ஆய அடி**
**பணிபவர்க்குப் பாங்காக வல்ல அடி**
**பற்றற்றார் பற்றும் பவள அடி**
**மணியடி பொன்னடி மாண்பாம் அடி**
**மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்ல அடி**
**தணிபாடு தண்கெடில நாடன் அடி**
**தகைசார் வீரட்டத் தலைவன் அடி.**

(ப-ரை) அணியனவும் சேயனவும் - அருகிலுள்ளனவும் தொலைவிலுள்ளனவும், அல்லா அடி - அல்லாத திருவடி, அடியார்கட்கு - திருத்தொண்டர்களுக்கு, ஆர் அமுதம் ஆயஅடி - உண்ணுகின்ற அமிழ்தமான திருவடி, பணிபவர்க்கு - வணங்குகின்றவர்களுக்கு, பாங்காக வல்லஅடி - உரிமையாகக்கூடிய திருவடி, பற்று அற்றார் - எல்லாவிதமான பற்றுகளும் அற்றவர்கள், பற்றும் பவள அடி - பற்றுகின்ற பவளம்போன்ற திருவடி, மணியடி - மணிபோன்ற திருவடி, பொன்அடி - பொன்போன்ற திருவடி, மாண்பாம் அடி - மாட்சிமையுடைய திருவடி, மருந்தாய் - மருந்தாகி, பிணி தீர்க்கவல்ல அடி - நோய்தீர்க்கும் வன்மையுடைய திருவடி, தணிபாடு - வெப்பம் தணிபடுதலையுடைய, தண் - குளிர்ச்சி பொருந்திய, கெடிலநாடன் அடி - கெடில நாட்டையுடையவன் திருவடி, தகைசார் - பெருமை மிக்க, வீரட்டத் தலைவன் அடி - வீரட்டானத்து எழுந்தருளிய இறைவன் திருவடி என்றவாறு.

10. **அந்தா மரைப்போ தலர்ந்த அடி**
**அரக்கனையும் ஆற்றல் அழித்த அடி**
**முந்தாகி முன்னே முளைத்த அடி**
**முழங்கழலாய் நீண்டஎம் மூர்த்தி அடி**
**பந்தாடு மெல்விரலாள் பாகன் அடி**
**பவளத் தடவரையே போல்வான் அடி**
**வெந்தார் சுடலைநீ றாடும் அடி**
**வீரட்டங் காதல் விமலன் அடி.**

(ப-ரை) அம் தாமரைப்போது - அழகிய தாமரைமலர், அலர்ந்த அடி - மலர்ந்தது போன்ற திருவடி, அரக்கனையும் - இராவணனையும், ஆற்றல் அழித்த அடி - வலிகெடுத்த திருவடி, முந்து ஆகி - எல்லாவற்றிற்கும் முந்தினதாகி, முன்னே முளைத்த அடி - முன்னே தோன்றிய திருவடி, முழங்கு அழலாய் - முழங்குகின்ற நெருப்புருவமாய், நீண்ட - எழுந்துநின்ற, எம்மூர்த்தி அடி - எம்முடைய மூர்த்தியின் திருவடி, பந்தாடு மெல்விரலாள் - பந்தாடுகின்ற மெல்லிய விரல்களையுடைய அம்பிகையினது, பாகன் அடி - பாகத்தையுடையவனது திருவடி, பவளம் தடவரையே - பெரிதாகிய பவள மலையையே, போல்வான் அடி - நிகர்ப்பவரது திருவடி, வெந்தார் - வெந்தவரது, சுடலை நீறு ஆடும் அடி - சுடலைப் பொடியைத் தரிக்கின்ற திருவடி, வீரட்டம் காதல் - திருவீரட்டானத்தை விரும்பி யெழுந்தருளி யிருக்கின்ற, விமலன் அடி - புனிதனாகிய இறைவன் திருவடி என்றவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

சென்ற இதழ் தொடர்ச்சி உ

# திருவருட்பயன் பதிமுது நிலை

## அதிகாரம் 1 வினாவிடைப் பயிற்சி

இளஞ்சைவப்புலவர், சித்தாந்தரத்தினம் திருமதி. நரேந்திரதிலகை நடராசா

4. "ஆக்கியெவையும் அளித்து ஆசுடன் அடங்கப்
போக்குமவன் போகாப் புகல்."

எவையும் - தனு, கரண, புவன, போகம் ஆகிய எல்லாப் பொருள்களையும்,
ஆக்கி - மாயையிலிருந்து படைத்துக் கொடுத்து,
அளித்து - குறித்த காலம் வரை அவை நிலைபெறும்படி காத்தல் (ஆணவம் தேய்ந்து வரும்வரை)
ஆசுடன் - அம்மலத்தோடு,
அடங்க - தான் படைத்துக் கொடுத்த உடம்பு முதலிய பொருள்களை ஒருசேர,
போக்கும் - உயிர்களிடமிருந்து நீக்கி அவை தன்னை அடையும்படி செய்கின்ற,
அவன் - அவ்விறைவனே,
போகாப்புகல் - உயிர்களுக்கு நீங்காப் புகலிடமாவான்.

உயிர்களுக்கு கட்டுநிலை, முத்திநிலை என இரு நிலைகள் உண்டு. இவ்விரு நிலைகளிலும் இறைவனே புகலிடமாகிறான்.

5. "அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன்."

உடையான் - எல்லாப் பொருள்களையும் தனது உடைமையாகக்கொண்ட இறைவன்,
அறிஞர்க்கு - மெய்யுணர்வுபெற்ற ஞானியர்க்கு,
அறிவாம் உருவும் - அறிவே வடிவான திருமேனியையும்,
அருவும் உருவும் - (ஏனையோர்க்கு) அருவ உருவத் திரு மேனிகளையும்,
உளன் - உடையவனாக இருப்பான்,
இறைவனுக்கு - பொதுநிலை உண்மைநிலை என இரு நிலைகள் உண்டு,

"நிலவும் அரு உரு இன்றி" சிவப்பிரபாசம் செ.13. உண்மைநிலை
"அருவும் உருவும் உளன்" திருவருட்பயன் பொதுநிலை
உமாபதி சிவம் கூறியவை.

6. "பல்லாருயிர் உணரும் பான்மையென மேல்ஒருவன்
இல்லாதான் எங்கள் இறை."

பல் ஆர் உயிர் - எண்ணற்றனவாய் நிறைந்த உயிர்கள்,
உணரும் பான்மையென - தாமே அறிய மாட்டாமல், தமக்குமேலொருவன் அறிவிக்க அறிவது போல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இறை - எம் இறைவன்,
மேலொருவன் இல்லாதான் - தன்னை அறிவித்தற்குத் தனக்கு மேலான ஒருவனை உடையவன் அல்லன்.(அவன் தானே அறிபவன், அவன் தான் எங்கள் இறைவனாவான்.)

7. "ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்"

- அடியவர் உள்ளத்து விலகாது விளங்கி நிற்பவன்.

வானாடர் காணாத - தேவர்களால் அறியப்படாத,
மன் - நிலைபெற்ற தலைவனாகிய இறைவன்,
அடியவர்க்கு - தனக்குத் தொண்டு பூண்டு நிற்கும் அடியவரிடத்தில்,
ஆனா அறிவாய் - அடியவர் அறிவினின்றும் நீங்காத அறிவாய்,
அகலான் - அவருடனே இருப்பான்.

8. "எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்
தங்கும் அவன்தானே தனி."

- கலந்து நிற்பினும் வேறாய் நிற்பவன்.

அவன் - அவ்விறைவன்,
எங்கும் - எல்லா இடங்களிலும்,
எவையும் - அவ்விடங்களில் உள்ள சித்தும் சடமும் ஆகிய எல்லாப் பொருள்களிலும்,
நீருறு எரிபோல் - காய்ச்சிய நீரில் பொருந்திய வெப்பம் போல,
ஏகம் தங்கும் - ஒன்றாய்க் கலந்து நிற்பான்,
தான்தனி - ஆயினும் அவன் பொருட்டன்மையில் வேறாகியே நிற்பான்.

9. "நலமிலன் நண்ணார்க்கு நண்ணினார்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்"

- சார்ந்தவர்க்கு இன்பம் தருபவன்,

சம் - இன்பம்,
கரன் - செய்பவன்,
நண்ணார்க்கு - தன்னைச் சாராதவர்க்கு,
நலம் இலன் - இன்பம் செய்யான்,
நண்ணினார்க்கு - தன்னைச் சார்ந்தவர்க்கு,
நல்லன் - இன்பத்தைச் செய்வான், (இப்படி ஒரு சாரார்க்கு மட்டும் இன்பம் செய்பவன் என்று) எண்ண வேண்டா. ஏனெனின் அவன் எல்லா உயிர்களையும் ஆணவமலத்தைத் தேய்த்து அருள்பாலித்து முத்தி இன்பத்திற்கு வழி சமைப்பான்,
சலம் இலன் - அவன் ஓரவஞ்சனை இல்லாதவன்,
பேர் சங்கரன் - எல்லா உயிர்களுக்கும் தனது பேரின்பத்தை வழங்குபவன் என்பதால், உண்மை நூல்கள் அவனைச் சங்கரன் என்று குறிப்பிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கல்லால்
நலமிலன் நாடோறும் நல்குவான் நலன்
குலமிலராகினும் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே."

இப்படியாக நமச்சிவாயப் பதிகத்தில் நாவுக்கரசர் குறிப்பிடுகின்றார்.

10. "உன்னும் உளது ஐயம்இலது உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து."

- பிறவிக்கு மருந்தாவான் இறைவன்

| | | |
|---|---|---|
| ஓவாது | - | ஒழியாது, |
| மன்னுபவம் | - | நிலைபெற்று நிற்கின்ற பிறவிப்பிணி, |
| தீர்க்கும் மருந்து | - | தீர்க்கின்ற மருந்து ஒன்று ஆகிய இறைவன், |
| உணர்வாய் | - | உங்களது அறிவுக்கு அறிவாய், |
| உளது | - | உங்களுடன் இருக்கின்றது, |
| ஐயம் இலது | - | இறைவன் இருப்பில் நீங்கள் ஐயம் கொள்ளவேண்டா, |
| உன்னும் | - | அதனை உள்நோக்காக நோக்கி உணரமுற்படுங்கள், பிறவியாகிய நோய் துன்பத்தையே விளைவிக்கும், |

"இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலுமருளுகின் றானே."

- திருமூலர் மொழி.

உமாபதிசிவாசாரியார் குருபூசைத்தினம் சித்திரை அத்த நட்சத்திரமாகும்.

7ஆம் பக்கத் தொடர்ச்சி.


கைகாட்டி திருவாசகப் பொருள் விளக்கி உருவம் காட்டாது மறைந்த நிலை பிறவாநிலையேயாகும். அருளாளர்களுக்கு இறைவன் என்றும் எல்லாவற்றையும் அறிவித்து நிற்கின்றான். உயிர் அறியும் நிலை என்பது இதில் அமைவது காணலாம். "**காட்டாதன வெல்லாம் காட்டிப் பின்னும் கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை மீட்டேயும் பிறவாமல் காத்து ஆட்கொண்டான்**" என்றதும் முன் உணர்த்தும் நிலையையே விளக்கி நிற்கின்றது.

இவ்வாறாக அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் மணிவாசகர் நிலையை தெட்டத்தெளிவாக விளக்கி நிற்பதைக் காணும்போது, அவர் சிவமாந்தன்மை பெற்று, சிவனருள் பெற்று இயங்கியவரென்பது வெளிப்படை உண்மையாகின்றது. இவ்வித ஆவணச் சான்றுகள் சிவகதிக்கு இன்றியமையாதனவாகும். இதை உணர்ந்து பின்பற்றினால் வீட்டு நெறிச் சிவநூல்கள் என்றும் சிவப்பேறிற்கு கைகொடுப்பனவாக அமையும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகப் பெருவிழா 2017.12.17


### ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக் கல்லூரி, முன்னேச்சரம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருவாசகப் பெருவிழா 2017.12.17

## ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக் கல்லூரி, முன்னேச்சரம்.




Sharp Graphics (Pvt.) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org